தமிழ்ப் பதிப்பக வெளியீ

அ.நூ.வை.

# இன்னா நாற்பது



சக்தி காரியாலயம்
மதுரை —— சென்னை

தமிழ்ப் பதிப்பக வெளியீடு உ.

கபில தேவர்

இயற்றிய

# இன்னா நாற்பது

(பழைய உரையுடன்)

பதிப்பாசிரியர் :

ராவ்ஸாஹெப்

ச. வையாபுரிப் பிள்ளை

சக்தி காரியாலயம்

சென்னை : : மதுரை

முதற்பதிப்பு, மே - 1944

உரிமை பதிவு
செய்யப்பெற்றது

விலை அணா
பத்து

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை

# பதிப்புரை

அச்சில் வெளிவாராத பழைய நூல்களையும், திருந்திய முறையில் அச்சிடப்படாத நூல்களையும், முன் அச்சிட்டும் தற்போது பிரதிகள் கிடைக்காத நூல்களையும், வெளியிடத் தமிழ்ப் பதிப்பகம் முயற்சி செய்கிறது. ஆராய்ச்சியாளர்கள், பொதுமக்கள், மாணவர்கள் முதலிய அனைவர்க்கும் பயன் படும் முறையில் இப்பதிப்புக்கள் வெளியிடப் பெறுகின்றன. முதலில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை வெளியிடத் தீர்மானித்திருக்கிறோம். இதுகாறும் அச்சிடப்பெறாத பழைய உரையுடன், இன்னா நாற்பது இப்பொழுது வெளிவருகிறது.

இப்பதிப்பைச் சிறந்த முறையில் பலவகை அகராதி, குறிப்புக்கள் முதலியவற்றுடன் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சித்துறைத் தலைவர் ராவ்ஸாஹெப் - திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் பதிப்பித்து உதவியுள்ளார்கள். பல்கலைக்கழகத்து மாணவர் திரு. மு. சண்முகம் பிள்ளை இம்முயற்சியில் பெரிதும் உழைத்துள்ளார்கள். இந்நூலை சக்தி காரியாலயத்தார் அழகுற அச்சியற்றி வெளியிட்டுத் தந்துள்ளார்கள். இவர்கள் யாவர்க்கும் எங்களது நன்றி உரியதாகுக.

மயிலாப்பூர்
1—5—44

கா. இராமநாதன் செட்டியார்
தி. கி. நாராயணசாமி நாயுடு
காரியதரிசிகள், தமிழ்ப் பதிப்பகம்

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| முன்னுரை | ... | 5 - 11 |
| ஒப்பு நோக்கிய அச்சுப் புஸ்தகங்கள் | ... | 12 |
| ஒப்பு நோக்கிய ஏட்டுப் பிரதிகள் | ... | 12 |
| நூல் | ... | ௧ - ௧௫ |
| செய்யுள் முதற்குறிப்பு | ... | ௧௬ |
| நூற்பொருள் | ... | ௧௭ - ௨௨ |
| சொல் - தொடர் அகராதி | ... | ௨௩ - ௩௦ |
| அருஞ்சொற் பொருள் | ... | ௩௧ - ௩௩ |
| விளக்கக் குறிப்பு | ... | ௩௪ - ௪௩ |

# முன்னுரை

இன்னா நாற்பது பதினெண்கீழ்க்கணக்கு இன்னவை எனச் சுட்டும் செய்யுளில் 'நானாற்பது' என்னுந் தொடரால் குறிக்கப்படும் நூல்களில் ஒன்று. நால்நாற்பது ஆவன : இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார்நாற்பது, களவழி நாற்பது என்பன.

'இன்னா என்னுஞ் சொல்லினையுடைய நாற்பது கவி யாதொரு நூலின் உண்டு அந்நூல் இன்னா நாற்பது எனவும், இவ்வண்ணம் இனிய நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது எனவும் வருவன பின்மொழிகள் எண்மொழி யாதலால் 'பின்மொழி எண்தொகை' என்பர் வீரசோழிய உரைகாரர் (47, உரை).

எனவே, வீரசோழிய உரைகாரருக்கு முந்தியன நானாற்பது. வீரசோழியம் 11-ம் நூற்றாண்டிலும் வீரசோழியவுரை 12-ம் நூற்றாண்டிலும் தோன்றியன. ஆகவே 12-ம் நூற்றாண்டுக்கு முற்பட்டது இன்னாநாற்பது. பேராசிரியர் 'பதினெண் கீழ்க்கணக்கி னுள்ளும முத்தொள்ளாயிரத் துள்ளும் ஆறடியின் ஏறாமல் செய்யுள் செய்தார் பிற்சான்றோரும் எனக்கொள்க' (தொல். செய். 158) என எழுதியுள்ளார். இதனால் சங்க காலத்துச் சான்றோருக்கு இந்நூல் முதலியன பிற்பட்டன என்பது விளங்கும். எனவே 3 அல்லது 4-ம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டன எனக் கொள்ளலாம.

இனி, வள்ளுவரது தொடர்களும் கருத்துக்களும் பல இடங்களில் இந்நூலகத்து வந்துள்ளமை காணலாம். உதாரணமாக,

> அறைபறை அன்னர் கயவர் தாம்கேட்ட
> மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான். (குறள் - 1076)

என்ற தொடரும் கருத்தும்

அறைபறை அன்னவர் சொல்இன்னா (இன்னா - 24)

என்பதன்கண் வந்துள்ளமை காண்க.

கிழமையுடை யாரைக் கீழ்ந்திடுதல் இன்னா (இன்னா - 28)

என்ற தொடரும்

கிழமையைக் கீழ்ந்திடா நட்பு (குறள் - 801)

என்ற தொடரும் ஒத்துள்ளன.

கெடுமிடங் கைவிடுவார் நட்பு (இன்னா - 37)

என்றதன் கருத்து,

கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும் (குறள் - 799)

என்ற திருக்குறளை ஆதாரமாகக் கொண்டு வந்தது. ஆதலால் வள்ளுவர் காலத்துக்குப் பிற்பட்ட நூலென்று இதனைக் கொள்ளுதல் தகும்.

படைக்கலம என்ற பொருளில் 'கருவி' என்பது இந்நூலகத்து வந்துள்ளது. குயிலின் குரல் (21), மலரின் அழகு (8), மனையின் வனப்பு (2), முழவின் ஒலி (32) என்பனவற்றில் 'இன்' உருபு ஆறும் வேற்றுமைப் பொருளில் வந்துள்ளது. வள்ளல்கள் (10) எனக் 'கள்' விகுதி உயர்திணைப் பன்மையைக்குறிக்கிறது. இவையும் சக்தி(1), பாக்கு (40), வெறும (39) முதலிய பிற்காலச் சொற்களும் காணப்படுதலின், இந்நூல் சுமார் கி. பி. 7-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இயற்றப்பட்டிருக்கலாம்.

இந்நூலை இயற்றியவர் கபிலதேவர் என ஒரு பிரதியிற் காணப்படுகிறது. ஆனால், கபிலர் என்பதே பெரும்பான்மை வழக்கு. தமிழ் இலக்கியத்தில் பலர் கபிலர் என்ற பெயருடையவராக உள்ளனர். சங்க காலத்து ஒருவரும், 11-ம் திருமுறையில் ஒருவரும், பன்னிரு பாட்டியலில் குறிக்கப்படும் ஒருவரும், கபிலரகவல் என்னும் நூலை இயற்றியவர் ஒருவரும், ஆக நால்வரை எளிதிற்

குறிப்பிடலாம். இவர்களுள் பன்னிரு பாட்டியற் சூத்திரங்களை இயற்றியவரும் இன்னா நாற்பது என்பதனை இயற்றியவரும், மொழியின் இயல்பை நோக்குமிடத்து, ஒருவராக இருத்தல் கூடும்.

பாரியின் நண்பராயும் சங்க இலக்கியத்தில் (கலித்தொகையை நீக்கி) 206 - செய்யுட்களை இயற்றியவராயும் உள்ள கபிலர் என்னும பெயருடைய புலவர் இன்னா நாற்பதின் ஆசிரியராகிய கபிலரின் வேறுவர் என்றே தோன்றுகிறது. பாரியின் நண்பருக்கு மதுவும் மாமிசமும் உண்ணுதல் உடன்பாடாகும்.

மட்டுவாய் திறப்பவும் மைவிடை வீழ்ப்பவும்
அட்டான்று ஆனாக் கொழுந்துவை ஊன்சோறும்
பெட்டாங்கு ஈயும் பெருவளம் பழுநி
நட்டனை மன்னோ முன்னே

என்று ஒரு புறநானூற்றுச் செய்யுள் (113) அறிவிக்கின்றது. பிறிதொரு செய்யுள் (119) 'பாரியின் நாடு செமபுற்றின்கண் ஈயலை இனிய மோரோடு கூட்டி அடப்பட்ட புளிங்கறியை உடைத்து முன்பு; இனி அது கெடுங்கொல்லோ ?' எனக் கபிலர் இரங்குவதாக உணர்த்துகின்றது. அச்செய்யுளின் அடிகள் வருமாறு :

செம்பொற் றீயலின் இன்னளைப் புளித்து
மென்றினை யாணர்த்து நந்துங் கொல்லோ ?

இன்னா நாற்பது என்ற இந்நூலை இயற்றியவருக்குக் கள்ளும் ஊனும் உடன்பாடல்ல. அவற்றால் இன்னாமை மிக விளையும் என்று கூறுகின்றார் :

கள்ளுண்பான் கூறுங் கருமப்பொருள் இன்னா (34)
ஊனைத்தின் றூனைப் பெருக்குதல் முன்னின்னா (23)

என்பனவற்றைக் காண்க. இக்கொள்கை யுடையார் ஊனைத் தின்று வாழ்ந்தார் என்று கூறுவது பொருத்தமாகத் தோன்றவில்லை. அன்றியும் சங்கப் புலவராகிய

கபிலர் அந்தணராவார். 'அந்தணன் புலவன் கொண்டு வந்தனனே' என்று இவர் கூறிய செய்யுள் (புறம் - ௨०௧) தெரிவிக்கின்றது. இன்னா நாற்பதில்,

அந்தணர் இல்லிருந்து ஊண் இன்னா (இன்னா - 2)

பார்ப்பாரிற் கோழியும் நாயும் புகல்இன்னா (இன்னா - 3)

இன்னா, ஒத்திலாப் பார்ப்பான் உரை (இன்னா - 22)

என மூன்று இடங்களில் அந்தணர்கள் குறிப்பிடப்படுகின்றார்கள். இம்மூன்றிடங்களிலும் அந்தணருடைய பெருமையை விளக்குவதாக ஒன்றும் காணப்படவில்லை. இதற்கு மாறாக அவர்களை நகையாடிக் கூறுவதுபோலவே தோன்றுகிறது. இதனை நோக்குமிடத்தும், இன்னா நாற்பது என்ற நூலை இயற்றியவர் அந்தணர் அல்லர் என்று நினைக்க இடமுண்டு.

இவரது சமயத்தை நோக்குமிடத்து, இவர் பதினொராந் திருமுறையில் வரும் கபிலர் ஆகார் எனத் துணிதல் பொருந்தும். மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி என்ற மூன்று பிரபந்தங்களும் கபிலதேவ நாயனார் இயற்றியனவாக இத்திருமுறையில் உள்ளன. விநாயக வணக்கம் இன்னா நாற்பதில் இல்லை: பலராமன், திருமால், இவர்களுக்கும் வணக்கம் உளது. இவற்றால் இன்னா நாற்பதின் ஆசிரியர் கபிலதேவ நாயனாரின் வேறானவர் என்பது புலனாகின்றது. இப் பதினொராந் திருமுறைப் பிரபந்தங்களைக் குறித்துச் சென்னைப் பல்கலைக் கழகத்து ஜூனியர் லெக்சரர் திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள் தமது கபிலர் என்ற ஆராய்ச்சி நூலில் (பக். 45-48) விரிவாகக் கூறியுள்ளார்கள். கூறிய வனைத்தும் தமிழறிஞர்களால் கொள்ளத் தக்கனவே.

இன்னா நாற்பதும் இனியவை நாற்பதும் பெயரமைப்புக் கொண்டே ஒன்றனோடு ஒன்று இயைபுடையது

என்று கருதலாம். ஒரு செய்யுள் இரு நூல்களிலும் கருத்தொற்றுமை யுடையதாகவுள்ளது.

யானைஇல் மன்னரைக் காண்டல் நனிஇன்னா ;
ஊனைத்தின் றூனைப் பெருக்குதல் முன்இன்னா ;
தேன்நெய் புளிப்பின் சுவைஇன்னா ; ஆங்குஇன்னா
கான்யாறு இடையிட்ட ஊர் (இன்னா - 23)

யானை யுடைய படைகாண்டல் முன்இனிதே
ஊனைத்தின் றூனைப் பெருக்காமை முன்இனிதே ;
கான்யாற்று அடைகரை ஊர்இனிது ; ஆங்குஇனிதே
மானம் உடையார் மதிப்பு. (இனியவை - 5)

இதனாலும் ஒன்றை நோக்கி ஒன்று இயற்றப்பட்டது என்பது தெளிவாம். சிலர் இனியவை நாற்பது முன்னாகவும் இன்னா நாற்பது பின்னாகவும் தோன்றியன என்பர். ஆனால், இனியவை நாற்பது பல இடங்களிலும் திரிகடுகத்தை ஒட்டிச் செல்வதாலும், மிகுதி என்ற பொருளில் 'முன்' என்ற சொல் இந்நூலிற் பல இடங்களிற் காணப்படுதலாலும், சுமார் 8-ம் நூற்றாண்டளவில் தோன்றிய 'பொலிசை' என்ற சொல் இதன்கண் வந்திருத்தலாலும், இந்நூல் இன்னா நாற்பது என்பதன் பின்னர்த் தோன்றியது எனவே கொள்ளத்தக்கது. வீரசோழிய உரைகாரரும் இன்னா நாற்பதைத் தனியாக முற்படக் காட்டியது இதனை வலியுறுத்துகிறது. ஏட்டுப் பிரதிகளில் இன்னா நாற்பதன் பின் இனியவை நாற்பது எழுதப்பட்டுள்ளதும் இக்காலக் குறிப்பை உட்கொண்டதாகலாம்.

இந்நூல் காப்புச் செய்யுள் நீக்கி 40 செய்யுட்கள் கொண்டது. ஒவ்வொரு செய்யுளிலும் நான்கு இன்னாத பொருள்கள் கூறப்பட்டுள்ளன. அதனால் இந்நூலுக்கு 'இன்னா நாற்பது' என்ற பெயர் வந்தது.

இந்நூலில் கூறியது கூறலாகச் சில பொருள்கள் வந்துள்ளன. உதாரணமாக

இடும்பை யுடையார் கொடை இன்னா (இன்னா - 7)
இன்னா பொருள்இல்லார் வண்மை புரிவு (இன்னா - 11)

பொருள் இலான் வேளாண்மை காமுறுதல் இன்னா (இன்னா - 37)

என்பனவற்றையும்

வண்மை இலாளர் வனப்பு இன்னா (இன்னா - 10)

வளமை இலாளர் வனப்பு இன்னா (இன்னா - 28)

என்பனவற்றையும்

பண்ணில் புரவிப் பரிப்பு இன்னா (இன்னா - 10)

வெறும்புற வெம்புரவி ஏற்று இன்னா (இன்னா - 39)

என்பனவற்றையும் நோக்குக. நூற்பொருள் சிலவற்றை வற்புறுத்துதற்பொருட்டு ஆசிரியர் மீண்டும் மீண்டும் இவ்வாறு கூறியுள்ளார் என்று தோன்றுகிறது.

கழிப்புவாய் மண்டிலங் கொட்பு (இன்னா - 35)

என்பதும்

வெள்ளம் படுமாக் கொலை இன்னா (இன்னா - 34)

என்பதும் ஸ்மிருதிக் கருத்துக்களாக இருக்கலாம் ; தமிழ் நூல்களில் இவை காணப்படவில்லை.

இந்நூலின் மூலபாடம் பலராலும் அச்சிடப்பட்டதே. சில செய்யுட்களின் உண்மை வடிவம் இதுகாறும் புலப்படாதிருந்தது. உதாரணமாக 36-வது செய்யுளை எடுத்துக் கொள்க.

குழல்இல் இயமரத்து ஓசைநற்கு இன்னா

என ஓரடி இச்செய்யுளில் வருகிறது. இதனைக் 'குழலினிய மரத்து' எனவும் 'குழலினிய மன்றத்துள்' எனவும் பலவாருகப் பாடங்கொண்டு உண்மைப் பொருள் காணுது பதிப்பாளர்கள் இடர்ப்பட்டனர். இப்பதிப்பிற்குதவிய ஏட்டுப் பிரதிகள் உண்மைப் பாடத்தைத் தெரிவித்துள்ளன. இங்ஙனம் சில பல திருத்தங்களை இப்பதிப்பிற் காணலாம். பதிப்பு விவரங்களை முன்னுரையின் இறுதியில் காண்க.

உரையும் ஏனைப் பழைய உரைகளோடு ஒப்பச் செவ்விதாக அமைந்துள்ளது. இவ்வுரை இதுவரை அச்சில் வெளியிடப் பெறாதது.

கழிப்புவாய் மண்டிலங் கொட்பு (இன்னா - 35

மாற்றம் அறியான் உரை (இன்னா - 8)

தலைதண்டமாகச் சுரம் போதல் (இன்னா - 13)

முதலியவற்றிற்கு இப்பழைய வுரை கூறும் பொருள்கள் முன்னூல்களையும் மரபுகளையும் நன்கு தெரிந்து எழுதப்பட்டன வாதல்வேண்டும்.

இந்நூலைப் பதிப்பிடுவதற்குக் கிடைத்த ஏட்டுப் பிரதிகள் இரண்டு. ஒன்று காலஞ்சென்ற திரு. தி. த. கனக சுந்தரம் பிள்ளை யவர்களுக்கு உரியது. மற்றொன்று மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு உரியது. பிள்ளை யவர்கள் பிரதியின் இறுதியில் 'கபிலராற் செய்யப்பட்ட இன்னா நாற்பது முற்றும். சருவசித்தி வருஷம் ஆனி மாசம் கருஉ' என்று குறிக்கப்பட்டுள்ளது. இக்காலக் குறிப்பையும் பிரதியின் நிலைமையும் நோக்கினால், இப்பிரதி எழுதப்பெற்று 177 ஆண்டுகள் ஆகியிருக்கலாம்.

கீழ்க்கணக்கு நூல்களைப் பதிப்பிடுவதற்குப் பல்கலைக் கழகத்தார் அனுமதி அளித்துள்ளார்கள். பல்கலைக் கழகத்து மாணவர் வித்வான் திரு. மு. சண்முகம் பிள்ளை ஏட்டுப்பிரதியிலிருந்து இந்நூலினை முற்றும் பெயர்த்தெழுதினார்; அன்றியும் பதிப்பு முயற்சியில் பெரிதும் உதவினர். தமிழ்ப் பதிப்பகத்தார் கீழ்க்கணக்கு நூல்களைத் தங்கள் பதிப்பாக வெளியிட இசைந்துள்ளார்கள். சக்தி காரியாலயத்தார் இந்நூல்களை அச்சியற்ற மனமுவந்து இசைந்து அழகாக இந்நூலை வெளியிட்டுள்ளார்கள். இவர்கள் அனைவர்க்கும் எனது நன்றி உரியது.

சென்னை
1 - 5 - 44

**எஸ். வையாபுரிப் பிள்ளை**

## ஒப்பு நோக்கிய அச்சுப் புஸ்தகங்கள்

| மூலம் (அல்லது) உரை | பதிப்பித்தவர் | ஆண்டு | பதிப்பு விவரம் |
|---|---|---|---|
| 1. மூலம் | தி. ச. ஆறுமுக நயினர் திரிசிரபுரம் | 1901 | தமிழ்ச் செல்வம்: நீதி நூற்றொகை (இரண்டாவது பிரிவு எண்) |
| 2. ந. மு. வேங்கடசாமி நாட்டார் உரையுடன் | ந. மு. வேங்கடசாமி நாட்டார் | 1924 | தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், திருநெல்வேலி |
| 3. கா. ர. கோவிந்தராஜ முதலியார் உரையுடன் | கா. ர. கோவிந்தராஜ முதலியார் | | மதராஸ் ரிப்பன் அச்சு யந்திரசாலை |

## ஒப்பு நோக்கிய ஏட்டுப் பிரதிகள்

| பிரதிசெய்த காலம் இடம் முதலியன | உரியவர் |
|---|---|
| 1. சருவ சித்தி வருஷம் ஆனி மாசம் கரு-உ | திரு. தி. த. கனகசுந்தரம் பிள்ளை |
| 2. ஆழ்வார் திருநகரி | மதுரைத் தமிழ்ச் சங்க நூல் நிலையம் |

## கபிலதேவர்

### இயற்றிய

# இன்னா நாற்பது

முக்கட் பகவன் அடிதொழா தார்க்குஇன்னா ;
பொற்பனை வெள்ளையை உள்ளாது ஒழுகுஇன்னா ;
சக்கரத் தானை மறப்புஇன்னா ; ஆங்குஇன்னா
சத்தியான் தாள்தொழா தார்க்கு.

இதன்பொருள்: முக்கண்ணினையுடைய பகவன் அடி தொழா தார்க்கு இன்னாவாம் ; பொற்பனைக் கொடியையுடைய வெள்ளி யோனை நினையாது ஒழுகுதல் இன்னாவாம் ; சக்கரப்படையினை உடையானை மறப்புக்கள் இன்னாவாம் ; அவைபோல இன்னாவாம் *வேற்படையையுடைய முருகன்தாள் தொழாதார்க்கு என்றவாறு.

பந்தம்இல் லாத மனையின் வனப்புஇன்னா ;
தந்தைஇல் லாத புதல்வன் அழகுஇன்னா ;
அந்தணர் இல்லிருந்து ஊண்இன்னா ; ஆங்குஇன்னா
மந்திரம் வாயா விடின்.

சுற்றமில்லாத மனையின் அழகு கண்டார்க்கு இன்னா ; தந்தையை இழந்த புதல்வன் அழகு கண்டார்க்கு இன்னா ; மறையவர்

1. 5-6 பொற்பனவூர்தியை, பொற்பன வெள்ளியை, பொற்பனை வெள்ளியை ; 8 எழிலின்னா ; 11 மறப்பு இன்னாது   2. 1-2 பந்தமிலாத ; 3 மனைவி ; 11 ஊண் இன்னாது ; 13 மந்திரி   * வேலினை யுடையவனது தானைத்.

இல்லில் மறையவரல்லாதார் இருந்து உண்ணும் உணவு இன்னா; அவைபோல இன்னா சூழ்ந்த சூழ்ச்சிகள் வாயாது *ஒழியின்.

மந்திரம் என்று மறைமொழியும் சொல்லுப. உ

பார்ப்பார்இற் கோழியும் நாயும் புகல்இன்னா;
ஆர்த்த மனைவி அடங்காமை நற்குஇன்னா;
பாத்துஇல் புடைவை உடைஇன்னா; ஆங்குஇன்னா
காப்புஆற்றா வேந்தன் உலகு.

அந்தணர் மனையில் கோழியும் நாயும் புகுதல் இன்னாவாம்; வரைந்துகொண்ட மனைவி தன்னால் அடங்காமை மிகவும் இன்னாவாம்; இணையில்லாத தனிப் புடைவையுடுத்தல் இன்னாவாம்; அவைபோல இன்னா காக்கமாட்டாத அரசன் உலகுகள். ௩

கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்தல் இன்னா;
நெடுநீர் புணைஇன்றி நீந்துதல் இன்னா;
கடுமொழி யாளர் தொடர்புஇன்னா; இன்னா
தடுமாறி வாழ்தல் உயிர்க்கு.

கொடுங்கோலையுடைய மறமன்னர்கீழ் வாழ்தல் இன்னாவாம்; பெருநீரைப் புணைகொண்டன்றி நீந்துதல் இன்னாவாம்; கடுமொழியாளரொடு தொடர்பு இன்னாவாம்; தடுமாறி வாழ்தல் உயிர்க்கு இன்னாவாம். ௪

எருதுஇல் உழவர்க்குப் போகுஈரம் இன்னா;
கருவிகள் மாறிப் புறங்கொடுத்தல் இன்னா;
திருவுடை யாரைச் செறல்இன்னா; இன்னா
பெருவலியார்க்கு இன்னா செயல்.

எருதில்லாத உழவர்க்குச் செவ்வி கழியும் ஈரம் இன்னாவாம்; பிடித்த படைகளால் உள்ள செய்கையை அவ்விடத்து நின்றும்

3. 8 நன்கின்னா 5. 5 கருவிகண்; 7 புறக்கொடுத்தல்
*ஒழுகின்.

மாறிப் பகைவர்க்குப் புறங்கொடுத்தல் இன்னாவாம்; செல்வமுடையாரைச் செறுதல் அரியவாதலின் செறுதல் இன்னாவாம்; பெருவலியையுடையார்க்கு இன்னாமை செய்தல் இன்னாவாம். ௫

சிறைஇல் கரும்பினைக் காத்துஓம்பல் இன்னா;
உறைசோர் பழங்கூரை சேர்ந்துஒழுகல் இன்னா;
முறைஇன்றி ஆளும் அரசுஇன்னா; இன்னா
மறைஇன்றிச் செய்யும் வினை.

வேலியில்லாத கரும்பினைக் காத்து ஓம்புதல் இன்னாவாம்; துளி ஒழுகும் பழங் கூரையையுடைய மனையை அடைந்துறைதல் இன்னாவாம்; முறைமைகெட ஆளும் அரசும் இன்னாவாம்; சூழ்ச்சியின்றிச் செய்யும் வினையும் இன்னாவாம். ௬

அறமனத்தார் கூறுங் கடுமொழி இன்னா;
மறமனத்தார் ஞாட்பில் மடிந்துஒழுகல் இன்னா;
இடும்பை யுடையார் கொடைஇன்னா; இன்னா
கொடும்பாடு உடையார்வாய்ச் சொல்.

அறத்தையுடைய நெஞ்சத்தார் கூறுங் கடுஞ்சொல் இன்னா; மறத்தையுடைய நெஞ்சத்தார் போரின்கண் மடிந்தொழுகுதல் இன்னா; வறுமையான் இடும்பையுடையார் வண்மை இன்னா; நடுவுநிலைமை இல்லாதார் வாய்ச் சொற்களும் இன்னாவாம். ௭

ஆற்றல் இலாதான் பிடித்த படைஇன்னா;
நாற்றம் இலாத மலரின் அழகுஇன்னா;
தேற்றம் இலாதான் துணிவுஇன்னா; இன்னா
மாற்றம் அறியான் உரை.

**6.** 5 புரைசேர், உறைசேர்; 4 இன்னது; 7 சோர்ந்தொழுகல்; **10** (ச்) செய்யும் **7.** 3-4 கடுமொழியு மின்னா **8.** 11 துணிபின்னா

வீரமில்லாதவன் *பிடித்த படை இன்னா ; இனிய நாற்றமில்லாத பூவின் அழகு இன்னா ; ஒன்றைத் தெரிந்து துணியமாட்டாதான் துணிவும் இன்னா ; அதுபோல இன்னா தனக்கு எதிர் உரைக்குமவன் மாற்றத்தை அறிந்து உரையாதான் உரை.

மாற்றம் அறியான் உரை என்பது சொல்லறியான் என்றுமாம்.

பகல்போலும் நெஞ்சத்தார் பண்புஇன்மை இன்னா ;
நகையாய நண்பினார் நார்இன்மை இன்னா ;
இகலின் எழுந்தவர் ஓட்டுஇன்னா ; இன்னா
நயம்இல் மனத்தவர் நட்பு.

நகத்துப் பகலாணிபோல நடுவு நிற்கும் நெஞ்சத்தார் குணமின்றி யொழிதல் இன்னா ; மகிழ்ச்சி யுடைத்தாகிய நண்பையுடையார் பசையில்லாமை இன்னா ; போர் செய்தும் என்று தொடங்கினார் ஓடுதல் இன்னா ; ஈரமில்லாத மனத்தவரோடு நட்டல் இன்னா.

பகல்போலும் நெஞ்சத்தார் என்பது இருள் தீர்ந்த மனத்தார் என்றும் ஆம். கூ.

கள்இல்லா மூதூர் களிகட்கு நற்குஇன்னா ;
வள்ளல்கள் இன்மை பரிசிலர்க்கு முன்இன்னா ;
வண்மை இலாளர் வனப்புஇன்னா ; ஆங்குஇன்னா
பண்இல் புரவிப் பரிப்பு.

கள்ளின்றி ஒழிந்த முதுபதிகள் களிப்பார்கட்கு இன்னா ; உபகாரிகள் இல்லாமை இரவலர்க்கு †மிக இன்னா ; வண்மையில்லாதார் வடிவின் அழகுகளும் இன்னா ; அவைபோல இன்னா பண்ணில்லாத குதிரையின் செலவுகள். கo

**9.** 9 இகலில் ; 13 நவமின் **10.** 4 நன்கின்னா ; 10 யிலாதான் *கொண்ட. †மிகவும்.

பொருள்உணர்வார் இல்வழிப் பாட்டுஉரைத்தல் இன்னா ;
இருள்கூர் சிறுநெறி தாம்தனிப்போக்கு இன்னா ;
அருள்இல்லார் தங்கண் செலவுஇன்னா ; இன்னா
பொருள்இல்லார் வண்மை புரிவு.

பொருளின் நன்மை உணர்வார் இல்லாதவிடத்துப் பாட்டுச் சொல்லுதல் இன்னா ; இருள் மிக்க சிறுவழியின்கண் தனிப் போகுதல் இன்னா ; அருளில்லாதார் மாட்டு ஒன்றை வேண்டிச்செல்லுதல் இன்னா ; பொருளில்லாதார் வண்மை புரிதல் இன்னாவாம். ௧௧

உடம்பாடு இலாத மனைவிதோள் இன்னா ;
இடன்இல் சிறியாரோடு யாத்தநண்பு இன்னா ;
இடங்கழி யாளர் தொடர்புஇன்னா ; இன்னா
கடன்உடையார் காணப் புகல்.

தன்னொடு பொருத்தமில்லாத மனைவி தோள் சேர்தல் இன்னா; மனத்தின்கண் விரிவில்லாத சிறியாரோடு பிணித்த நட்பு இன்னா ; ஒழுக்கமில்லாதாரோடு தொடர்ச்சி இன்னா ; தனிசுடையார் காணப் புகுதல் இன்னா. ௧௨

தலைதண்ட மாகச் சுரம்போதல் இன்னா ;
வலைசுமந்து உண்பான் பெருமிதம் இன்னா ;
புலைஉள்ளி வாழ்தல் உயிர்க்குஇன்னா ; இன்னா
முலைஇல்லாள் பெண்மை விழைவு.

தன்தலை யிழவாகச் சுரத்தின்கண் போதல் இன்னா ; வலையினைச் சுமந்து உண்பான் செருக்கு இன்னா ; புலை வரையாது வாழ்தல் உயிர்க்கு இன்னா ; முலையில்லாதாள் பெண்மையை விழைதல் இன்னா. ௧௩

**12.** 3-4 மனைவி தொழிலின்னா ; 13 கடமுடையார் **13.** 13 முலையிலாள்

மணிஇலாக் குஞ்சரம் வேந்துஊர்தல் இன்னா ;
துணிவுஇல்லார் சொல்லுந் தறுகண்மை இன்னா ;
பணியாத மன்னர் பணிவுஇன்னா ; இன்னா
பிணிஅன்னார் வாழும் மனை.

மணியணியாத யானையை வேந்தன் மேற்கொள்ளுதல் இன்னா; துணியமாட்டாதவன் சொல்லும் வீரங்கள் இன்னா; முன்பு தாழ்வில்லாத மன்னர் தாழ்வு காண்டல் இன்னா ; பிணிபோன்ற மனைவியர் வாழும் மனை இன்னா. கச

வணர்ஒலி ஐம்பாலார் வஞ்சித்தல் இன்னா ;
துணர்தூங்கும் மாவின் படுபழம்இன்னா ;
புணர்பாவை அன்னார் பிரிவுஇன்னா ; இன்னா
உணர்வார் உணராக் கடை.

வணரொலி யைம்பாலார் தம் கொழுநரை வஞ்சித்தல் இன்னா ; தொத்துத் தூங்குகின்ற மாவினின்று விழுந்த பழங்கள் இன்னா ; பொருந்திய பாவை போல்வார் பிரிவு இன்னா ; அறியுந் தன்மையையுடையார் அறியாராயின் இன்னா. கரு

புல்ஆர் புரவி மணிஇன்றி ஊர்வுஇன்னா ;
கல்லார் உரைக்குங் கருமப் பொருள்இன்னா ;
இல்லாதார் நல்ல விழைவுஇன்னா ; ஆங்குஇன்னா
பல்லாருள் நாணப் படல்.

புல்லை ஆர்கின்ற புரவி மணியின்றி ஏறுதல் இன்னா ; கல்லாதார் சொல்லும் காரியத்தின் பயன் இன்னா ; *வறுவியார் நல்லனவற்றை விரும்புதல் இன்னா ; அவைபோல இன்னா பலர் நடுவண் நாணும் பழிபடுதல். கசா

**14.** 13 பிணியன்னர் **15.** 1 வணரொளி **16.** 11 விருப்பின்னா *வறுவியான்.

உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்புஇன்னா;
நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனிஇன்னா;
கண்இல் ஒருவன் வனப்புஇன்னா; ஆங்குஇன்னா
எண்இலான் செய்யுங் கணக்கு.

தான் துவ்வாது வைக்கும் பெரும்பொருளை வைத்தல் இன்னா; பொருந்தாத பகைவரோடு பொருந்துதல் மிக இன்னா; கண்ணிலாத ஒருவன் அழகு இன்னா; அவைபோல இன்னா எண் அறியாதான் செய்யும் கணக்குக்கள். கஎ

ஆன்றுஅவிந்த சான்றோருள் பேதைபுகல் இன்னா;
மான்றுஇருண்ட போழ்தின் வழங்கல் பெரிதுஇன்னா;
நோன்றுஅவிந்து வாழாதார் நோன்புஇன்னா; ஆங்குஇன்னா
ஈன்றாளை ஓம்பா விடல்.

அமைந்து அடங்கிய சான்றோர் நடுவுள் பேதை புகுதல் இன்னா; மயங்கியிருண்ட பொழுதின்கண் வழிவழங்குதல் மிகவும் இன்னா; பொறுத்து அடங்கி *வாழாதார் நோற்றல் இன்னா; அவைபோல இன்னா ஈன்றாளைப் பாதுகாவாது விடுதல். கஅ

உரன்உடையான் உள்ளம் மடிந்திருத்தல் இன்னா;
மறன்உடையான் ஆடையால் மார்புஆர்த்தல் இன்னா;
சுரம்அரிய கானம் செலவுஇன்னா; இன்னா
மனவறி யாளர் தொடர்பு.

அறிவுடையாளன் தன் மனம் மடிந்திருத்தல் இன்னா; பகையுடையான் ஆடையால் மார்பு ஆர்த்தல் இன்னா; சுரத்தால் †செலற்கரிய கானத்துப் போதல் இன்னா; இன்னா மனத்தின்கண் வறுவியார் தொடர்ச்சி. க௯

**18.** 10 வாழாதான் **19.** 5-6 மறனுடை யாளுடையான்; 9 சுரமிரிய; 13-14 அகம் வறியாளர்

*வாழாதான். †சேறலரிய.

குலத்துப் பிறந்தவன் கல்லாமை இன்னா;
நிலத்துஇட்ட நல்வித்து நாறாமை இன்னா;
நலத்தகையார் நாணாமை இன்னா; ஆங்கு இன்னா
கலத்தல் குலம்இல் வழி.

நல்லகுலத்துப் பிறந்தவன் கல்லாமைகள் இன்னா; நன்னிலத்து இட்ட நல்வித்து முளையாமை இன்னா; நல்ல வடிவினையுடைய மகளிர் நாணின்றி *யொழிதல் இன்னா; அவைபோல இன்னா குலமில்வழிக் கலத்தல். ௨௰

மாரிநாட் கூவுங் குயிலின் குரல்இன்னா;
ஈரம் இலாளர் கடுமொழிக் கூற்றுஇன்னா;
மாரி வளம்பொய்ப்பின் ஊர்க்குஇன்னா; ஆங்குஇன்னா
மூரி எருத்தால் உழவு.

மாரிக்காலத்தின்கண் கூவும் குயிற்குரல் இன்னா; மனத்தின் †ஈரப்பாடிலாதார் கடுமொழி கூறுதல் இன்னா; மழைவளங் குன்றின் ஊர்க்கு இன்னா; ‡அவைபோல இன்னா வடியா எருத்தால் உழவு. ௨௧

ஈத்த வகையால் உவவாதார்க்கு ஈப்புஇன்னா;
பாத்துஉணல் இல்லாருழைச்சென்று உணல்இன்னா;
மூத்த இடத்துப் பிணிஇன்னா; ஆங்குஇன்னா
ஓத்துஇலாப் பார்ப்பான் உரை.

கொடுத்தவளவின் இன்புறாதார்க்குக் கொடுத்தல் இன்னா; பகுத்து ஊட்டி யுண்ணாதார்மாட்டுச் சென்று உண்ணல் இன்னா; மூப்பு வந்த இடத்துப் பிணிவருதல் மிகவும் இன்னா; அவைபோல §மறை யோதாத அந்தணன் உரை இன்னா. ௨௨

**20.** 1 குலத்திற் **21.** 5 வீரம் **22.** 10 இடத்த *யொழுகுதல். †திறப்பாடிலாதார். ‡அவ்வகை. §மறைநூல்.

யானைஇல் மன்னரைக் காண்டல் நனிஇன்னா ;
ஊனைத்தின்று ஊனைப் பெருக்குதல் முன்இன்னா
தேனெய் புளிப்பின் சுவைஇன்னா ; ஆங்குஇன்னா
கான்யாறு இடைபிட்ட ஊர்.

*யானைப் படையிலா அரசரைக் காண்டல் மிகவும் இன்னா; ஊனைத் தின்று தன்னூனைப் பெருக்குதல் முந்துற இன்னா; தேனாகிய நெய் சுவை திரிந்து புளிப்பின் இன்னா; அவைபோல இன்னா சிறையில்லாக் †கான்யாற்றிடையிட்ட ஊர்கள். உரு

சிறைஇல்லா மூதூரின் வாயில்காப்பு இன்னா ;
துறைஇருந்து ஆடை கழுவுதல் இன்னா ;
அறைபறை அன்னவர் சொல்இன்னா ; இன்னா
நிறைஇல்லான் கொண்ட தவம்.

மதில் இல்லாத முதியவூரின் வாயிலின்கண் காக்கும் காப்பு இன்னா ; நீர்த்துறையின்கண் இருந்து உடுத்த ஆடை மாசு போக்குதல் இன்னா ; அறையும் பறைபோலத் தாம் கேட்ட மறைகளைப் பிறர்க்குச் சொல்லுவார் சொற்கள் இன்னா; பொறிகளைத் தடுக்க மாட்டாதான் கொண்ட தவம் இன்னா. உச

ஏமம்இல் மூதூர் இருத்தல் மிகஇன்னா ;
தீமை உடையார் அயல்இருத்தல் நற்குஇன்னா ;
காமம் முதிரின் உயிர்க்குஇன்னா ; ஆங்குஇன்னா
யாம்என் பவரோடு நட்பு.

காவல் இல்லாத முதியவூரின்கண் இருந்துறைதல் மிகவும் இன்னா ; தீய குணங்களை உடையார்க்கு அயல் இருத்தல் மிகவும்

23. 13 காறு 24. 10 யர்யவர் ; 13 நிறையிலான்
25. 8 நன்கின்னா ; 11 உயிர்க்கு இன்னாது *யானையில்லா.
†கான்யாற்று நடுவுபட்ட.

இன்னா; காமம் மிக்கால் தன் உயிர்க்கு இன்னா; நீ யாம் என்று வேறு படுப்பாரோடு நட்புக்கோடல் இன்னா.

அல்லதூஉம் யாம் என்று தம்மை மதிப்பவரோடு நட்பு இன்னா என்றுமாம். ௨௫

நட்டார் இடுக்கண்கள் காண்டல் நனிஇன்னா;
ஒட்டார் பெருமிதங் காண்டல் பெரிதுஇன்னா
கட்டுஇல்லா மூதூர் உறைவுஇன்னா; ஆங்குஇன்னா
நட்ட கவற்றினால் சூது.

தன்னோடு நட்டார் உறும் இடுக்கண்களைக் காண்டல் மிகவும் இன்னா; பகைவருடைய செருக்கினைக் காணுதல் இன்னா; காவல் இல்லாத மூதூரின்கண் உறைதல் இன்னா; அவைபோல இன்னா இணைத்த கவற்றின் ஆடுஞ் சூதி. ௨௬

பெரியாரோடு யாத்த தொடர்விடுதல் இன்னா;
அரியவை செய்தும் எனஉரைத்தல் இன்னா;
பரியார்க்குத் தாம்உற்ற கூற்றுஇன்னா; இன்னா
பெரியார்க்குத் தீய செயல்.

குணத்தாற் பெரியாரோடு பிணித்த தொடர்ச்சியை நீங்குதல் இன்னா; அரிய செயல்களைச் செய்வேம் என்று பிறர்க்கு மேற் கொண்டு சொல்லுதல் இன்னா; காதலில்லாதார்க்குத் தாமுற்ற இடும்பையைச் சொல்லுதல் இன்னா; வலியாற் பெரியார்க்குத் தீயவற்றைச் செய்தல் இன்னா. ௨௭

பெருமை உடையாரைப் பீடுஅழித்தல் இன்னா;
கிழமை உடையாரைக் கீழ்ந்திடுதல் இன்னா;
வளமை இலாளர் வனப்புஇன்னா; இன்னா
இளமையுள் மூப்புப் புகல்.

**26.** 2-4 இடுக்கண் நனிகண்டல் நற்கின்னா; 2-3 இடுக்கண் தனி காண்டல்; 7 நனிகண்டல், கண்டால்; 9 கட்டிலா; 11 உறை யின்னா **28.** 6-7 உடையார்க் களைந்திடுதல்

பெருமையுடையாரைப் பெருமை அழியப் பேசுதல் இன்னா; உரிமையுடையாரை அவ்வுரிமையைச் சிதைத்தல் இன்னா; வண்மையில்லாதார் அழகு இன்னா; இளமைக் காலத்து மூப்புப்போலத் தளர்ச்சியைப் பண்ணும் பிணிகள் புகுதல் இன்னா. ௨௮

கல்லாதான் ஊருங் கலிமாப் பரிப்புஇன்னா;
வல்லாதான் சொல்லும் உரையின் பயன்இன்னா;
இல்லார்வாய்ச் சொல்லின் நயம்இன்னா; ஆங்குஇன்னா
கல்லாதான் கோட்டி கொளல்.

கற்றுவல்லன் அல்லாதான் மேற்கொள்ளும் மனம்மிக்க மாவின் செலவு இன்னா; மாட்டாதான் சொல்லும் சொல்லின் பயன் இன்னா; வறுவியார் வாயிற் சொல்லின் நன்மை இன்னா; அவைபோல இன்னா கல்லாதான் அவையின்கண் ஒன்றைச்சொல்ல மேற்கோடல். ௨௯

குறிஅறியான் மாநாகம் ஆட்டுவித்தல் இன்னா;
தறிஅறியான் கீழ்நீர்ப்பாய்ந் தாடுதல் இன்னா;
அறிவுஅறியா மக்கட் பெறல்இன்னா; இன்னா
செறிவுஇலான் கேட்ட மறை.

பாம்பினது குறிப்பறியாதான் அதனை ஆட்டுதல் இன்னா; கீழ் நட்ட கழுவினை யறியாதவன் நீரின்கண் பாய்ந்தாடுதல் இன்னா; அறியப்படும் அறிவினை யறியாத புதல்வரைப் பெறுதல் இன்னா; அடக்கமில்லாதான் கேட்ட மறைகள் இன்னாவாம். ௩௦

நெடுமர நீள்கோட்டு உயர்பாய்தல் இன்னா;
கடுஞ்சின வேழத்து எதிர்சேறல் இன்னா;
ஒடுங்கி அரவுஉறையும் இல்இன்னா; இன்னா
கடும்புலி வாழும் அதர்.

29. 9-11 இல்லாதான் நல்ல விழைவின்னா; 11 நயம் இன்னாது
**30.** 2 மானாகம்; 6-7 நீரின்கட் பாய்ந்தாடல் **31.** 1-3. நெடுமர நீள் கோட்டுயர் பாஅய்தல்

நெடிய மரத்தின்கண் நீண்ட கோட்டுயர்வின்கணின்று கீழ்ப் பாய்தல் இன்னா; மிக்க சினத்தையுடைய யானையின் எதிர்சேறல் இன்னா; பாம்பு ஒடுங்கி உறையும் மனைகள் இன்னா; கடிய புலிகள் உறையும் வழிகள் இன்னா. ௩௧

பண் அமையா யாழின்கீழ்ப் பாடல் பெரிதுஇன்னா;
எண் அறியா மாந்தர் ஒழுக்குநாட் கூற்றுஇன்னா;
மண் இல் முழவின் ஒலிஇன்னா; ஆங்குஇன்னா
தன்மை இலாளர் பகை.

வீக்கம் அறியாத யாழினிடத்திலிருந்து பாடுதல் இன்னா; கணிதம் அறியாத மக்கள் நடாத்தும் நாட் சொலவுகள் இன்னா; மண்ணில்லாத முழவின் ஒலி இன்னா; அவைபோல இன்னா குணமில்லாதாரோடு பகை கோடல். ௩௨

தன்னைத்தான் போற்றாது ஒழுகுதல் நற்குஇன்னா;
முன்னை உரையார் புறமொழிக் கூற்றுஇன்னா;
தன்மை இலாளர் தொடர்புஇன்னா; ஆங்குஇன்னா
தொன்மை உடையார் கெடல்.

தன்னைத் தீமையிற் செல்லாமை தான் காவாதொழுகுதல் மிகவும் இன்னா; ஒருவன் எதிர் உரையாது புறங் கூறுதல் இன்னா; நற்குணங்கள் இல்லாதாரோடு நட்பு இன்னா; பழைதாக வருகின்ற செல்வமுடைய குடிப்பிறந்தார் கெடுதல் இன்னா. ௩௩

கள்உண்பான் கூறுங் கருமப் பொருள்இன்னா;
முள்உடைக் காட்டில் நடத்தல் நனிஇன்னா;
வெள்ளம் படுமாக் கொலைஇன்னா; ஆங்குஇன்னா
கள்ள மனத்தார் தொடர்பு.

**32.** 13 தண்மை **33.** 4 நன்கின்னா; 9 நன்மை **34.** 7 நடக்கின், நடக்கல்

கள்ளுண்ணும் ஒருவன் உரைக்கும் உரைப்பயன் இன்னா; முள்ளுடைக் கானத்துச் சேறல் மிகவும் இன்னா; வெள்ளத்தின் நடுவே அகப்பட்ட மாவினைக்கோறல் இன்னா; அவைபோல இன்னா வஞ்சனையுடைய மனத்தாரோடு தொடர்ச்சி. ௩௪

ஒழுக்கம் இலாளர்க்கு உறவுஉரைத்தல் இன்னா ;
விழுத்தகு நூலும் விழையாதார்க்கு இன்னா ;
இழித்த தொழிலவர் நட்புஇன்னா ; இன்னா
கழிப்புவாய் மண்டிலங் கொட்பு.

ஒழுக்கமுடையர் அல்லாதார்க்குத் தொடர்பு கூறுதல் இன்னா; சீரிய நூல்களும் அந்நூல்களை விரும்பாதார்க்கு இன்னா; பிறரால் இழிக்கப்பட்ட தொழிலினையுடையாரோடு நட்பு இன்னா; கதுவாய்ப் படக் குறைந்த மதியினது செலவு காண்டல் இன்னா.

அல்லதூஉம் நல்லார் கழிக்கப்பட்ட நாடுகளில் சென்று திரிதல் இன்னா என்றுமாம். ௩௫

எழிலி உறைநீங்கின் ஈண்டையார்க்கு இன்னா ;
குழல்இல் இயமரத்து ஓசைநற்கு இன்னா ;
குழவிகள் உற்ற பிணிஇன்னா ; இன்னா
அழகுஉடையான் பேதை எனல்.

மழை பெய்தல் தவிரின் இவ்வுலகத்தார்க்கு இன்னா; குழலில்லாத இயமரங்களின் ஓசை கேட்டல் இன்னா; குழவிகள் *பிணிப்பட்ட பிணி இன்னா; அழகுடையான் பிறரால் பேதையெனப்படுதல் இன்னா. ௩௬

35. 3 உறையுரைத்தல் ; 5 வழுத்தகு ; 13 கழிப்புலாய் 36. 5 குழலின் ; 5-6 குழலி னினியமரத்து ; 5-8 குழலினிய மன்றத்துள் ஓசை நன்கின்னா ; 7-8 ஓசைநன்கின்னா *படும்.

பொருள்இலான் வேளாண்மை காமுறுதல் இன்னா;
நெடுமாட நீள்நகர்க் கைத்துஇன்மை இன்னா;
அடுமனை பார்த்திருந்து ஊண்இன்னா; இன்னா
கெடுமிடங் கைவிடுவார் நட்பு.

பொருளில்லாதான் வண்மையைக் காதலித்தல் இன்னா; நெடிய மாடத்தையுடைய பெரிய நகரத்தின்கண் கைப்பொருள் இன்றியிருத்தல் இன்னா; பிறர்மனை பார்த்திருந்து உண்ணும் உணவு இன்னா; கெடுமிடத்தின்கண் கைவிடும் நட்பு இன்னா. ௩எ

நறிய மலர்பெரிதும் நாறுமை இன்னா;
துறைஅறியான் நீர்இழிந்து போகுதல் இன்னா;
அறியான் வினாப்படுதல் இன்னா; ஆங்கு இன்னா
சிறியார்மேல் செற்றங் கொளல்.

அழகிய மலரின்கண் மிகவும் நாறுமை இன்னா; துறையறியாதவன் நீரிழிந்து போகுதல் இன்னா; அறிவுடையன் அல்லாதவன் அறிவுடையாரால் வினவப்படுதல் இன்னா; அவைபோல, கீழ்மக்கள் மாட்டுச் செற்றம் கொளல் இன்னா. ௩அ

பிறன்மனையாள் பின்னோக்கும் பேதைமை இன்னா;
மறம்இலா மன்னர் செருப்புகுதல் இன்னா;
வெறும்புறம் வெம்புரவி ஏற்றுஇன்னா; இன்னா
திறன்இலான் செய்யும் வினை.

பிறனொருவன் மனையாளது இடத்தினைப் பார்க்கும் அறியாமை இன்னா; மனத்தின்கண் வீரம் இல்லாத மன்னர் போரின்கண் புகுதல் இன்னா; வெறும் புரவியைப் பண்ணுது ஏறுகை இன்னா; நெறி அறியாதான் செய்யும் வினைகள் இன்னா. ௩௯

37. 9 வருமனை 38. 5-6 துறையறியா நீரிழிந்து, துறையறியாரிழிந் 39. 1 பிறமனையார்; 5 மறமில்லா

கொடுக்கும் பொருள் இல்லான் வள்ளன்மை இன்னா ;
கடித்துஅமைந்த பாக்கினுள் கல்படுதல் இன்னா ;
கொடுத்து விடாமை கவிக்குஇன்னா ; இன்னா
மடுத்துழிப் பாடா விடல்.

பிறர்க்குக் கொடுக்கும் பொருள் இல்லாதான் கொடை பூணு தல் இன்னா ; பிளந்தமைந்த பாக்கின்கண் கல்படுதல் இன்னா ; கொடையமையக் கொடுத்துவிடா தொழிதல் கவி செய்வானது கவிக்கு இன்னா ; கொண்ட *தானத்துக்குத் தக்க பாட்டைப் பாடா தொழிதல் இன்னா. ௪0

அடக்கம் உடையவன் மீளிமை இன்னா ;
தொடக்கம் இலாதவன் தற்செருக்கு இன்னா ;
அடைக்கலம் வவ்வுதல் இன்னா ; ஆங்கு இன்னா
அடக்க அடங்காதார் சொல்.

ஐம்பொறிகளை அடக்கி ஒருவன் சொல்லும் வலி இன்னா ; துணிந்து தொடங்கி ஒன்றைச் செய்யமாட்டாதான் தன்னை மதித் தல் இன்னா ; ஒருவன் அடைக்கலம் வைத்த பொருளைக் கொடா தொழிதல் இன்னா ; அவைபோல இன்னா கற்பிக்கக் கற்பனை கொள் ளாதார்க்குச் சொல்லும் சொல். ௪க

**40.** 14 பாரா **41.** 5 துடக்கம் *தானத்துத் தக்க பாடா தொழிதல்.

# செய்யுள் முதற்குறிப்பு


அடக்கம் உடையவன் ... 41
அறமனத்தார் ... 7
ஆற்றல் இலாதான் ... 8
ஆன்று அவிந்த ... 18
ஈத்த வகையால் ... 22
உடம்பாடு இலாத ... 12
உண்ணாது வைக்கும் ... 17
உரன் உடையான் ... 19
எருதுஇல் ... 5
எழிலி உறைநீங்கின் ... 36
ஏமம்இல் ... 25
ஒழுக்கம் இலாளர்க்கு ... 35
கல்லாதான் ஊரும் ... 29
கள் இல்லா மூதூர் ... 10
கள் உண்பான் ... 34
குலத்துப் பிறந்தவன் ... 20
குறி அறியான் ... 30
கொடுக்கும் ... 40
கொடுங்கோல் ... 4
சிறையில் கரும்பினைக் ... 6
சிறை இல்லா ... 24
தலைதண்டமாகச் ... 13
தன்னைத்தான் ... 33
நட்டார் இடுக்கண்கள் ... 26
நறியமலர் பெரிதும் ... 38
நெடுமர நீள்கோட்டு ... 31
பகல்போலும் ... 9
பண்அமையா யாழின் ... 32
பந்தம் இல்லாத ... 2
பார்ப்பார்இல் ... 3
பிறன்மனையாள் ... 39
புல்ஆர் புரவி ... 16
பெரியாரோடு ... 27
பெருமை உடையாரை ... 28
பொருள் உணர்வார் ... 11
பொருள் இலான் ... 37
மணிஇலாக் குஞ்சரம் ... 14
மாரிநாட் கூவும் ... 21
முக்கட் பகவன் ... 1
யானைஇல் மன்னரைக் ... 23
வணர் ஒலி ... 15

# நூற்பொருள்


| | | |
|---|---|---|
| அடக்க அடங்காதார் சொல் இன்னா | ... | 41 |
| அடக்க முடையவன் மீளிமை இன்னா | ... | 41 |
| அடுமனை பார்த்திருந்து ஊண் இன்னா | ... | 37 |
| அடைக்கலம் வவ்வுதல் இன்னா | ... | 41 |
| அந்தணர் இல்லிருந்து ஊண் இன்னா | ... | 2 |
| அரியவை செய்தும் எனஉரைத்தல் இன்னா | ... | 27 |
| அருள்இல்லார் தங்கண் செலவு இன்னா | ... | 11 |
| அழகுடையான் பேதை எனல் இன்னா | ... | 36 |
| அறமனத்தார் கூறுங் கடுமொழி இன்னா | ... | 7 |
| அறியான் வினைப்படுதல் இன்னா | ... | 38 |
| அறிவறியா மக்கட் பெறல் இன்னா | ... | 30 |
| அறைபறை அன்னவர் சொல் இன்னா | ... | 24 |
| ஆர்த்த மனைவி அடங்காமை இன்னா | ... | 3 |
| ஆற்றல் இலாதான் பிடித்த படை இன்னா | ... | 8 |
| ஆன்று அவிந்த சான்றோருள் பேதைபுகல் இன்னா | ... | 18 |
| இகலின் எழுந்தவர் ஓட்டு இன்னா | ... | 9 |
| இடங்கழி யாளர் தொடர்பு இன்னா | ... | 12 |
| இடன்இல் சிறியாரோடு யாத்தநண்பு இன்னா | ... | 12 |
| இடும்பை யுடையார் கொடை இன்னா | ... | 7 |
| இருள்கூர் சிறுநெறி தாம்தனிப் போக்கு இன்னா | ... | 11 |
| இல்லாதார் நல்ல விழைவு இன்னா | ... | 16 |
| இல்லார்வாய்ச் சொல்லின் நயம் இன்னா | ... | 29 |
| இழித்த தொழிலவர் நட்பு இன்னா | ... | 35 |
| இளமையுள் மூப்புப் புகல் இன்னா | ... | 28 |
| ஈத்த வகையால் உவவாதார்க்கு இன்னா | ... | 22 |
| ஈரமிலாளர் கடுமொழிக் கூற்று இன்னா | ... | 21 |

ஈன்றாளை ஓம்பாவிடல் இன்னா ... 18
உடம்பாடு இலாத மனைவிதோள் இன்னா ... 12
உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பு இன்னா ... 17
உணர்வார் உணராக்கடை இன்னா ... 15
உரனுடையான் உள்ளம் மடிந்திருத்தல் இன்னா ... 19
உறைசோர் பழங்கூரை சேர்ந்தொழுகல் இன்னா ... 6
ஊனைத்தின்று ஊனைப் பெருக்குதல் முன் இன்னா ... 23
எண்அறியா மாந்தர் ஒழுக்குநாட் கூற்று இன்னா ... 32
எண்இலான் செய்யுங் கணக்கு இன்னா ... 17
எருதுஇல் உழவர்க்குப் போகுஈரம் இன்னா ... 5
எழிலி உறைநீங்கின் ஈண்டையார்க்கு இன்னா ...
ஏமம்இல் மூதூர் இருத்தல் இன்னா ...
ஒட்டார் பெருமிதங் காண்டல் மிக இன்னா ...
ஒடுங்கி அரவுறையும் இல் இன்னா ...
ஒழுக்க மிலாளர்க்கு உறவுஉரைத்தல் இன்னா ...
ஓத்திலாப் பார்ப்பான் உரை இன்னா ...
கட்டுஇல்லா மூதூர் உறை இன்னா ...
கடனுடையார் காணப்புகல் இன்னா ...
கடித்தமைந்த பாக்கினுள் கற்படுதல் இன்னா ...
கடுஞ்சின வேழத்து எதிர்சேறல் இன்னா ...
கடும்புலி வாழும்அதர் இன்னா ...
கடுமொழி யாளர் தொடர்பு இன்னா ...
கண்இல் ஒருவன் வனப்பு இன்னா ...
கருவிகள் மாறிப் புறங்கொடுத்தல் இன்னா ...
கல்லாதான் ஊருங் கலிமாப் பரிப்பு இன்னா ...
கல்லாதான் கோட்டி கொளல் இன்னா ...
கல்லார் உரைக்குங் கருமப்பொருள் இன்னா ...
கலத்தல் குலம்இல்வழி இன்னா ...
கழிப்புவாய் மண்டிலங் கொட்பு இன்னா ...
கள்இல்லா மூதூர் களிகட்கு நன்கு இன்னா ...
கள்ள மனத்தார் தொடர்பு இன்னா ...

கள்ளுண்பான் கூறுங் கருமப்பொருள் இன்னா ... 34
காப்பாற்றா வேந்தன் உலகு இன்னா ... 3
காமம் முதிரின் உயிர்க்கு இன்னா ... 25
கான்யாறு இடையிட்ட ஊர் இன்னா ... 23
'கிழமை யுடையாரைக் கீழ்ந்திடுதல் இன்னா ... 28
குலத்துப் பிறந்தவன் கல்லாமை இன்னா ... 20
குழல்இல் இயமரத்து ஓசை நன்கு இன்னா ... 36
குழவிகள் உற்ற பிணி இன்னா ... 36
குறியறியான் மாநாகம் ஆட்டுவித்தல் இன்னா ... 30
கெடுமிடங் கைவிடுவார் நட்பு இன்னா ... 37
கொடுக்கும் பொருள் இல்லான் வள்ளன்மை இன்னா ... 40
கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்தல் இன்னா ... 4
கொடுத்து விடாமை கவிக்கு இன்னா ... 40
கொடும்பாடு உடையார் வாய்ச்சொல் இன்னா ... 7
சக்கரத்தானை மறப்பு இன்னா ... 1
சத்தியான் தாள்தொழாதார்க்கு இன்னா ... 1
சிறியார்மேல் செற்றங் கொளல் இன்னா ... 38
சிறைஇல் கரும்பினைக் காத்தோம்பல் இன்னா ... 6
சிறைஇல்லா மூதூரின் வாயில்காப்பு இன்னா ... 24
சுரம்அரிய கானஞ் செலவு இன்னா ... 19
செறிவிலான் கேட்ட மறை இன்னா ... 30
தடுமாறி வாழ்தல் உயிர்க்கு இன்னா ... 4
தந்தைஇல்லாத புதல்வன் அழகு இன்னா ... 2
தலைதண்டமாகச் சுரம்போதல் இன்னா ... 13
தறியறியான் கீழ்நீர்ப்பாய்ந் தாடுதல் இன்னா ... 30
தன்மையிலாளர் பகை இன்னா ... 32
தன்மை யிலாளர் தொடர் இன்னா ... 33
தன்னைத்தான் போற்றாது ஒழுகுதல் நன்கு இன்னா ... 33
திருவுடை யாரைச் செறல் இன்னா ... 5
திறன்இலான் செய்யும் வினை இன்னா ... 39
தீமையுடையார் அயல்இருத்தல் இன்னா ... 25

துணர்தூங்கு மாவின் படுபழம் இன்னா ... 15
துணிவுஇல்லார் சொல்லுந் தறுகண்மை இன்னா ... 14
துறையறியான் நீர்இழிந்து போகுதல் இன்னா ... 38
துறையிருந்து ஆடை கழுவுதல் இன்னா ... 24
தேற்றம் இலாதான் துணிவு இன்னா ... 8
தேனெய் புளிப்பின் சுவை இன்னா ... 23
தொடக்கம் இலாதவன் தற்செருக்கு இன்னா ... 41
தோன்மை யுடையார் கெடல் இன்னா ... 33
நகையாய நண்பினார் நார்இன்மை இன்னா ... 9
நட்ட கவற்றினால் சூது இன்னா ... 26
நட்டார் இடுக்கண்கள் காண்டல் நனி இன்னா ... 26
நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனி இன்னா ... 17
நயம்இல் மனத்தவர் நட்பு இன்னா ... 9
நலத்தகையார் நாணாமை இன்னா ... 20
நறியமலர் பெரிதும் நாறாமை இன்னா ... 38
நாற்றம் இலாத மலரின் அழகு இன்னா ... 8
நிலத்து இட்ட நல்வித்து நாறாமை இன்னா ... 20
நிறைஇல்லான் கொண்ட தவம் இன்னா ... 24
நெடுநீர் புணைஇன்றி நீந்துதல் இன்னா ... 4
நெடுமர நீள்கோட்டு உயர்பாய்தல் இன்னா ... 31
நெடுமாட நீள்நகர்க் கைத்தின்மை இன்னா ... 37
நோன்று அவிந்து வாழாதார் நோன்பு இன்னா ... 18
பகல்போலும் நெஞ்சத்தார் பண்பு இன்மை இன்னா ... 9
பண் அமையா யாழின்கீழ்ப் பாடல் பெரிதுஇன்னா ... 32
பண்இல் புரவிப் பரிப்பு இன்னா ... 10
பணியாத மன்னர் பணிவு இன்னா ... 14
பந்தம் இல்லாத மனையின் வனப்பு இன்னா ... 2
பரியார்க்குத் தாம்உற்ற கூற்று இன்னா ... 27
பல்லாருள் நாணப்படல் இன்னா ... 16
பாத்துஇல் புடைவை உடை இன்னா ... 3
பாத்து உணல்இல்லாருழைச்சென்று உணல் இன்னா ... 22

பார்ப்பாரிற் கோழியும் நாயும் புகல் இன்னா ... 3
பிணியன்னார் வாழும் மனை இன்னா ... 14
பிறன்மனையாள் பின்நோக்கும் பேதைமை இன்னா ... 39
புணர்பாவை அன்னார் பிரிவு இன்னா ... 15
புல்ஆர் புரவி மணிஇன்றி ஊர்வு இன்னா ... 16
புலையுள்ளி வாழ்தல் உயிர்க்கு இன்னா ... 13
பெரியார்க்குத் தீய செயல் இன்னா ... 27
பெரியாரோடு யாத்த தொடர்விடுதல் இன்னா ... 28
பெருமை யுடையாரைப் பீடு அழித்தல் இன்னா ... 27
பெருவலியார்க்கு இன்னாசெயல் இன்னா ... 5
பொருள் இல்லார் வண்மை புரிவு இன்னா ... 11
பொருள் உணர்வார் இல்வழிப் பாட்டு உரைத்தல் இன்னா ... 11
பொருளிலான் வேளாண்மை காமுறுதல் இன்னா ... 37
பொற்பனை வெள்ளையை உள்ளாது ஒழுகு இன்னா ... 1
மடுத்துழிப் பாடாவிடல் இன்னா ... 40
மண்இல் முழவின் ஒலி இன்னா ... 32
மணிஇலாக் குஞ்சரம் வேந்தூர்தல் இன்னா ... 14
மந்திரம் வாயாவிடின் இன்னா ... 2
மறம்இலா மன்னர் செருப்புகுதல் இன்னா ... 39
மறமனத்தார் ஞாட்பின் மடிந்தொழுகல் இன்னா ... 7
மறனுடையான் ஆடையான் மார்புஆர்த்தல் இன்னா ... 19
மறைஇன்றிச் செய்யும் வினை இன்னா ... 6
மனவறி யாளர் தொடர்பு இன்னா ... 19
மாரிநாட் கூவும் குயிலின் குரல் இன்னா ... 21
மாரி வளம் பொய்ப்பின் ஊர்க்கு இன்னா ... 21
மாற்றம் அறியான் உரை இன்னா ... 8
மான்று இருண்ட போழ்தின் வழங்கல் பெரிது இன்னா ... 18
முக்கட் பகவன் அடிதொழாதார்க்கு இன்னா ... 1
முலைஇல்லாள் பெண்மை விழைவு இன்னா ... 13
முள்ளுடைக் காட்டில் நடத்தல் நனிஇன்னா ... 34
முறைஇன்றி ஆளும் அரசு இன்னா ... 6

| | | |
|---|---|---|
| முன்னை உரையார் புறமொழிக்கூற்று இன்னா | ... | 33 |
| மூத்த இடத்துப் பிணி இன்னா | ... | 22 |
| மூரி எருத்தால் உழவு இன்னா | ... | 21 |
| யாம் என்பவரோடு நட்பு இன்னா | ... | 25 |
| யானையில் மன்னரைக் காண்டல் நனிஇன்னா | ... | 23 |
| வண்மை யிலாளர் வனப்பு இன்னா | ... | 10 |
| வணரொலி ஐம்பாலார் வஞ்சித்தல் இன்னா | ... | 15 |
| வல்லாதான் சொல்லும் உரையின்பயன் இன்னா | ... | 29 |
| வலைசுமந்து உண்பான் பெருமிதம் இன்னா | ... | 13 |
| வள்ளல்கள் இன்மை பரிசிலர்க்கு முன்இன்னா | ... | 10 |
| வளமையிலாளர் வனப்பு இன்னா | ... | 28 |
| விழுத்தகு நூலும் விழையாதார்க்கு இன்னா | ... | 35 |
| வெள்ளம் படுமாக் கொலை இன்னா | ... | 34 |
| வெறும்புறம் வெம்புரவி ஏறுதல் இன்னா | ... | 39 |

# சொல் - தொடர் அகராதி

## [எண் - செய்யுள் எண்]


அடக்க 41
அடக்கம் 41
அடக்கமுடையவன் 41
அடங்காதார் 41
அடங்காமை 3
அடைக்கலம் 41
அடி 1
அடு 37
அடுமணை 37
அத்து (சாரியை) 1, 9(2), 20(2), 22, 31, 36
அதர் 31
அந்தணர் 2
அந்தணரில் 2
அமைந்த 40
அமையா 32
அயல் 25
அயல்இருத்தல் 25
அரசு 6
அரவு 31
அரிய 19
அரியவை 27
அருள் 11
அருள்இல்லார் 11
அவிந்த 18
அவிந்து 18
அழகு 2, 8
அழகுடையான் 36
அழித்தல் 28
அறம் 7
அறமனத்தார் 7
அறியா 30, 32
அறியான் 8, 30(2), 38 (2)
அறியான் உரை 8
அறிவு 30
அறிவுஅறியா 30
அறை 24
அறைபறை 24
அறைபறை அன்னவர் 24
அன்னவர் 24
அன்றார் 14, 15
ஆக 13
ஆங்கு 1, 2, 3, 8, 10, 16, 17, 18, 20, 21, 22, 23, 25, 26, 29, 32, 33, 34, 38, 41
ஆட்டுவித்தல் 30
ஆடுதல் 30
ஆடை 24
ஆடைகழுவுதல் 24
ஆடையான 19
ஆய 9
ஆர் 16
ஆர்த்த 3
ஆர்த்தல 19
ஆல் (உருபு) 21, 22, 26
ஆளர் 4, 12
ஆளும் (எச்சம்) 6
ஆறறல் 8
ஆற்றா 3
ஆன் (உருபு) 19
ஆன்று 18
ஆன்றுஅவிந்தசான்றோர் 18
இ[illegible]லின் 9
இட்ட 20, 23
இடங்கழி 12
இடங்கழியாளர் 12
இடத்து 22
இடம் 37
இடன் 12
இடுக்கண்கள் 26
இடுதல் (துணைவினை) 28
இடும்பை 7
இடும்பையுடையார் 7
இடையிட்ட 23
இயமரத்து 36
இருண்ட 18
இருத்தல் (துணைவினை) 19, 25
இருந்து 2, 24

இருந்து (துணைவினை) 37
இருள்கூர் 11
இருள் 11
இல் (இன்மை) 3, 5, 6, 9, 10, 11, 12, 17, 20, 23, 25, 32, 36
இல் (உருபு) 7, 34
இல் (மனை) 2, 3, 31
இல்ல 24
இல்லா 10, 26
இல்லாத 2(2)
இல்லாதார் 16
இல்லார் (11)2, 14, 22, 29
இலலாருழை 22
இல்லாள் 13
இல்லான் 24, 40
இல்வழி 11, 20
இலா 14, 22, 26, 39
இலாத 8, 12,
இலாதவன் 41
இலாதான் 8(2)
இலாதான்துணிவு 8
இலாளர் 10, 21, 28, 32, 33
இலாளர்க்கு 35
இலான் 17, 30, 37, 39
இழித்த 35
இழித்ததொழிலவர் 35
இழிந்து 38
இளமையுள் 28
இன் (ஆறனுருபு) 2, 8, 21, 24, 29(2), 32
இன் (உருபு) 9, 15, 18, 32
இன் (சாரியை) 6, 9, 26, 40
இன் (வினையெச்ச ஈறு) 21, 23, 25, 36
இன்மை 9(2), 10, 37
இன்றி 4, 6(2), 16
இன்னா 1(4), 2(4), 3(4), 4(4), 5(5), 6(4), 7(4), 8(4), 9(4), 10(4), 11(4), 12(4), 13(4), 14(4), 15(4), 16(4), 17(4), 18(4), 19(4), 20(4), 21(4), 22(4), 23(4), 24(4), 25(4), 26(4), 27(4), 28(4), 29(4), 30(4), 31(4), 32(4), 33(4), 34(4), 35(4), 36(4), 37(4), 38(4), 39(4), 40(4), 41(4)
இன்னா செயல் 5
ஈண்டையார்க்கு 36
ஈத்த 22
ஈப்பு22
ஈரம் 5, 21
ஈரமிலாளர் 21
ஈன்றுணை 18
உடம்பாடு 12
உடை (உடுத்தல்) 3
உடை (உடைய) 34
உடையவன் 41
உடையார் 7(2), 12, 25, 33
உடையாரை 5, 28(2)
உடையான் 19(2), 36
உண்ணாது 17
உண்பான் 13, 34
உண்பான்பெருமிதம் 13
உணர்வார் 11, 15
உணராக்கடை 15
உணல் 22(2)
உம் (இடை) 3(2), 35
உயர் 31
உயர்பாய்தல் 31
உயிர்க்கு 4, 13, 25
உரன் 19
உரனுடையான் 19
உரை 8, 22
உரைக்கும் (எச்சம்) 16
உரைத்தல 11, 27, 35
உரையார் 33
உரையின் 29
உலகு 3
உவவாதரர்க்கு 22
உழவர்கரு 5
உழவு 21
உழி (உருபு) 40
உழை (உருபு) 22
உழைச்சென்று 22
உள் (உருபு) 16, 18, 28, 40
உள்ளம் 19
உள்ளாது 1
உள்ளி 13
உற்ற 27, 36
உற்றபிணி 36
உறவு 35
உறுதல் 37
உறை 6, 36
உறைநீங்கின் 36
உறைவு 26
உறையும் (எச்சம்) 31
ஊண் 2, 37

உணர் 10, 23, 25, 26
உணர்க்கு 21, 26
உணர்தல் 14
உணரவு 16
உணரும் 29
உணல் 23(2)
எண் 17, 32
எதிர் 31
எதிர்சேறல் 31
எருத்தால் 21
எருது 5
எழிலி 36
எழுந்தவர் 9
என்பவரோடு 25
என 27
எனல் 36
ஏமம் 25
ஏறறு 39
ஐ (உருபு) 1(2), 5, 6, 15, 18, 23(3), 28(2), 33
ஐம்பாலார் 15
ஒட்டார் 26
ஒட்டார்பெருமிதம் 26
ஒடுங்கி 31
ஒருவன் 17
ஒலி 15, 32
ஒழுக்கம் 35
ஒழுக்கம்இலாளர்க்கு 35
ஒழுக்கு 32
ஒழுக்குநாள் 32
ஒழுகல 6, 7
ஒழுகு 1
ஒழுகுதல் 33
ஓசை 36
ஓட்டு 9
ஓடு (உருபு) 12, 25, 27
ஓத்து 22
ஓத்துஇலாப்பார்ப்பான் 22
ஓம்பல் 6
ஓம்பா 18
ஓம்பாவிடல் 18
கட்டு 26
கடன் 12
கடனுடையார் 12
கடித்தமைந்தபாக்கு 40
கடித்து 40
கடு(மை) 4, 7, 21, 31(2)
கடுஞ்சினவேழத்து 31
கடும்புலி 31
கடுமொழி 4, 7, 21
கடுமொழிக்கூற்று 21
கடுமொழியாளர் 4
கடை (எச்சஈறு) 15
கண் (உருபு) 11
கண் 1, 17
கணக்கு 17
கரும்பிணை 6
கருமம் 16, 34
கருமப்பொருள் [illegible]
கருவிகள் 5
கல் 40
கலலாதான் 29
கல்லாமை 20
கல்லார் 16
கலத்தல 20
கலி 29
கலிமா 29
கவற்றினால் 26
கவிக்கு 40
கழி 12
கழிப்பு 35
கழிப்புவாய்மண்டிலம் 35
கழுவுதல் 24
கள் (பன்மை) 5, 10(2), 26, 36
கள் 10, 34
கள்ளம் 34
கள்ளமனத்தார் 34
கள்ளுண்பான் 34
களிகட்கு 10
களிகள் 10
காட்டில் 34
காண்டல் 23, 26(2)
காண 12
காணப்புகல் 12
காத்து 6
காத்தோம்பல் 6
காப்பாற்று 3
காப்பு 3, 24
காமம் 25
காமுறுதல் 37
கான் 23
கான்யாறு 23
கானம் 19
கிழமை 28
கிழமையுடையாரை 28
கீழ் 4, 30, 32
கீழ்ந்திடுதல் 28
கீழ்நீர் 30

கீழ்வாழ்தல் 4
கு (உருபு) 1(2), 4, 5(2), 10(2), 13, 21, 22, 25, 27(2), 35(2), 36, 40
குஞ்சரம் 14
குயிலின 21
குரல் 21
குலத்து 20
குலம 20(2)
குலம்இல்வழி 20
குழல் 36
குழலஇலஇயமரம் 36
குழவிகள் 36
குறி 30
குறியறியான் 30
கூர் 11
கூரை 6
கூவும் (எச்சம்) 21
கூறறு 21, 27, 32, 33
கூறும் (எச்சம்) 7, 34
கெடல் 33
கெடும (எச்சம்) 37
கெடுமிடம 37
கைத்து 37
கைவிடுவார் 37
கேட்ட 30
கொட்பு 35
கொடுக்கும் (எச்சம்) 40
கொடுங்கோல் 4
கொடுத்து 40
கொடுத்துவிடாமை 40
கொடு(மை) 4
கொடும்பாடு 7
கொடை 7
கொண்ட 24
கொலே 34
கொளல 29, 38
கோட்டி 29
கோட்டிகொளல் 29
கோட்டு 31
கோல் 4
கோழியும் 3
சக்கரத்தானே 1
சததியான் 1
சத்தியான்தாள் 1
சான்ருேர்உள் 18
சிறியார்மேல் 38
சிறியாரோடு 12
சிறு 11
சிறுநெறி 11
சிறை 6, 24
சினம் 31
சுமந்து 13
சுரம்அரியகானம் 19
சுரம 13, 19
சுரம்போதல் 13
சுவை 23
சூது 26
செய்தும் 27
செய்யும் (எச்சம்) 6, 17, 39
செயல 5, 27
செரு 39
செருக்கு 41
செருப்புகுதல் 39
செலவு 11, 19
செறறங்கொளல் 38
செற்றம் 38
செறல் 5
செறிவு 30
செறிவு இலான் 30
சென்று 22
சேர்ந்து 6
சேர்நதொழுகல் 6
சேறல் 31
சொல 7, 24, 41
சொல்லின் 29
சொல்லும் (எச்சம்) 14, 29
சோர் 6
ஞாட்பில் 7
தகு 35
தகையார் 20
தங்கண் 11
தடுமாறி 4
தண்டமாக 13
தந்தை 2
தம் 11
தலே 13
தலேதண்டமாக 13
தவம் 24
தற்செருக்கு 41
தறி 30
தறியறியான் 30
தறுகண்மை 14
தன் 41
தன்மை 32, 33
தன்மையிலாளர் 32, 33
தன்னே 33
தனி 11

தனிப்போக்கு 11
தாம் 11, 27
தாள் 1
தான் 33
திரு 5
திருவுடையாரை 5
திறன 39
திறன்இலான் 39
தின்று 23
தீமை 25
தீமையுடையார் 25
தீய 27
துணா 15
துணிவு 8, 14
துணிவுஇல்லார் 14
துறை 24, 38
துறையறியான் 38
தூங்கும் (எச்சம்) 15
தேற்றம் 8
தேன்நெய் 23
தொடக்கம் 41
தொடர் 27
தொடர்பு 4, 12, 19, 33, 34
தொடர்விடுதல் 27
தொழாதார்க்கு 1(2)
தொழிலவர் 35
தொன்மை 33
தொன்மையுடையார் 33
தோள் 12
நகா 37
நகை 9
நட்ட 26
நட்பு 9, 25, 35, 37
நட்டார் 26
நடத்தல் 34
நண்ணா 17
நண்பினார் 9
நண்பு 12
நயம் 9, 29
நல் 20
நல்ல 16
நலவித்து 20
நலத்தகையார் 20
நலம் 20
நனி 17, 23, 26, 34
நறிய 38
நற்கு 3, 10, 25, 33, 36
நனி 17, 23, 26, 34
நாகம் 30
நாணப்படல் 16
நாணாமை 20
நாயும் 3
நார் 9
நார்இன்மை 9
நாள் 21, 32
நாற்றம் 8
நாறாமை 20, 38
நிலத்து 20
நிறை 24
நீங்கின் 36
நீந்துதல் 4
நீர் 4, 30, 38
நீர்இழிந்துபோகுதல் 38
நீள் 31, 37
நீள்கோட்டு 31
நீள்நகர் 37
நூலும் 35
நெஞ்சத்தார் 9
நெடு(மை) 4, 31, 37
நெடுநீர் 4
நெடுமரம் 31
நெடுமாடம் 37
நெய் 23
நெறி 11
நோக்கும் (எச்சம்) 39
நோன்பு 18
நோன்று 18
பகல் 9
பகவன் 1
பகை 32
பகைவர் 17
படல 16
படு 15, 34
படுபழம் 15
படுதல் 38, 40
படை 8
பண் அமையாயாழ் 32
பண் 10
பண்பு 9
பண் (நரம்பு வீக்குதல்) 32
பண்புஇன்மை 9
பணியாத 14
பணிவு 14
பந்தம் 2
பயன் 29
பரிசிலார்க்கு 10
பரிப்பு 10, 29
பரியார்க்கு 27

பல்வாருள் 16
பழம் (பழமை) 6
பழம் 15
பழங்கூரை 6
பறை 24
பனை 1
பாக்கினுள் 40
பாட்டு 11
பாடல் 32
பாடாவிடல் 40
பாத்து 3, 22
பாத்துஇல்புடைவை 3
பாத்துஉணல்இல்லார் 22
பாய்தல 31
பாய்ந்து 30
பாய்ந்துஆடுதல் 30
பார்ப்பார் 3
பார்ப்பாரில் 3
பார்ப்பான் 22
பார்பபான்உரை 22
பார்த்து 37
பார்த்திருந்து 37
பாலாா 15
பாவை 15
பிடிதத 8
பிணி 14, 22, 36
பிணியன்னூர் 14
பிரிவு 15
பிறந்தவன் 20
பிறன் 39
பின் 39
பின (எச்சசாறு) 21, 23
பின்நோக்கும் 39
பீடு 28
பீடுஅழித்தல் 28
புகல் 3, 12, 18. 28
புகுதல 39
புடைவை 3
புணர் 15
புணர்பாவை 15
புணர்ச்சி 17
புணை 4
புதல்வன் 2
புதல்வன்அழகு 2
புரவி 10, 11, 16, 39
புரவிப்பரிப்பு 10
புரிவு 11
புல் 16
புல்ஆர்புரவி 16
புலி 31
புலை 13
புளிப்பின் 23
புறங்கொடுத்தல் 5
புறம் 33, 39
புறமொழி 33
பெண்மை 13
பெரிது 18, 26, 32
பெரிதும் 38
பெரியார்க்கு 27
பெரியாரோடு 27
பெரு 5
பெருக்குதல் 23
பெரு(மை) 17
பெரும்பொருள் 17
பெருமிதம் 13, 26
பெருமை 28
பெருமையுடையாரை 28
பெருவலியார்க்கு 5
பெறல் 30
பேதை 18, 36
பேதைமை 39
பொய்ப்பின் 21
பொருள் 11(2), 16, 17, 34, 37, 40
பொருள்இல்லார் 11
பொருளஇல்லான 40
பொருள்உணர்வார் 11
பொருளிலான 37
பொறபனைவெள்ளையை 1
பொன் 1
போக்கு 11
போகிரம 5
போகு 5
போகுதல் 38
போதல் 13
போலும் (எச்சம்) 9
போழ்தின் 18
போற்றுது 33
மக்கட்பெறல் 30
மக்கள் 30
மடிந்திருத்தல், 19
மடிந்து 7, 19
மடிந்தொழுகல் 7
மடுத்துழி 40
மண் 32
மண் இல்முழவின் 32
மண்டிலம் 35
மணி 14. 16

மந்திரம் 2
மரம் 31
மலர் 38
மலரின் 8
மறப்பு 1
மறம் 4, 7, 39
மறமன்னர் 4
மறமனத்தார் 7
மறன் 19
மறனுடையான் 19
மறை 6, 30
மன்னர் 4, 14, 39
மன்னர்பணிவு 14
மன்னரை 23
மனத்தவர் 9
மனத்தார் 7(2), 34
மனம் 19
மனவறியாளர் 19
மனை 14, 37
மனையாள் 39
மனையின் 2
மனைவி 3, 12
மனைவிதோள் 12
மா 29, 30, 34
மாடம் 37
மாந்தர் 33
மாநாகம் 30
மார்பு 19
மாரி 21(2)
மாரிநாள் 21
மாவின் 15
மாற்றம் 8
மாறி 5
மான்று 18
மான்றுஇருண்டபோழ்தின் 18
மிக 25
மீளிமை 14
மூ (மூன்று) 1
முக்கட்பகவன் 1
முக்கண் 1
முதிரின் 25
முலை 13
முலைஇல்லாள் 13
முழவின் 32
முள் 34
முள்ளுடைக்காட்டில் 34
முறை 6
முன் 10, 23
முன்இன்னு 10, 23
முன்னை 33
மூத்த 22
மூது 10, 24, 25, 26
மூதூர் 10, 25, 26
மூதூரின் 24
மூப்பு 28
மூரி 21
மூரிஎருத்தால 21
மேல் (உருபு) 38
மொழி 4, 7, 21, 33
மொழியாளர் 4
யாத்த 12, 27
யாம் 25
யாழின் 32
யாறு 23
யானை 23
வகையால 22
வஞ்சித்தல 15
வண்மை 10, 11
வண்மையிலாளர் 10
வணர் 15
வணர்ஒலிஐம்பாலார் 15
வல்லாதான 29
வலியார்க்கு 5
வலை 13
வலைசுமந்துண்பான் 13
வவ்வுதல் 41
வழங்கல 18
வழி (உருபு) 11, 18, 20
வழிவழங்கல் 18
வள்ளலகள் 10
வள்ளன்மை 40
வளம் 21
வளம்பொய்ப்பின் 21
வளமை 28
வளமையிலாளர் 28
வறியாளர் 19
வனப்பு 2, 10, 17, 28
வாய் 7, 29, 35
வாய்ச்சொல் 7
வாய்ச்சொல்லின் 29
வாயில 24
வாயாவிடின் 2
வாழ்தல 4(2), 13
வாழாதார் 18
வாழும் (எச்சம்) 14, 31
விடல 18, 40
விடாமை 40
விடின் (துணைவினை) 2

விடுதல் 27
விடுவார் 37
வித்து 20
விழு 35
விழுத்தகு நூல் 35
விழையாதார்க்கு 35
விழைவு 13, 16
விறு 38
விறுப்படுதல் 38
வினை 6, 38
வெம் 39
வெம்புரவி 39
வெள்ளம் 34
வெள்ளை 1
வெறும் 39
வெறும்புறம் 39
வேந்தன் 3
வேந்தன் உலகு 3
வேந்து 14
வேழத்து 31
வேளாண்மை 37
வைக்கும் (எச்சம்) 17
வைப்பு 17

# அருஞ்சொற் பொருள்

அடுமனை - சோறு அடுகின்ற பிறர் மனை
அதர் - வழி
அரவு - பாம்பு
அறமனத்தார் - அறத்தையுடைய நெஞ்சத்தார்
அறை - அறைதல், அடித்தல்
அன்னவர் - போன்றவர்
அன்னோர் - ஒத்தவர்
ஆடை - உடை
ஆர் - ஆர்தல், தின்னுதல்
ஆர்த்த - வரைந்த, மணந்த
ஆற்றல் - வலிமை
ஆன்று - அமைந்து
இகல் - போர்
இடங்கழியாளர் - ஒழுக்கம் இல்லாதவர்
இடுக்கண்கள் - துன்பங்கள்
இடும்பை - துன்பம்
இயமரம் - வாச்சியம், இசைக் கருவிகள்
இன்னா - துன்பம்
ஈண்டையார்க்கு - இவ்வுலகத்தார்க்கு
ஈத்த - கொடுத்த
ஈரம் - அன்பு
ஈன்றாளை - பெற்ற தாயை
உடம்பாடு - பொருத்தம்
உரன் - அறிவு
உழி - தானம் (இடம்)
உழை - இடம் (மாட்டு)
உள்ளம் - மனம்
உள்ளாது - நினையாது
உள்ளி - நினைத்து
உறை - மழைத்துளி
உறையும் - தங்கும்
ஊண் - உணவு
ஊர்தல் - மேற்கொண்டு செலுத்தல்
ஊன் - மாமிசம்
எழிலி - மேகம்
ஏமம் - காவல்
ஏற்று - ஏறுகை
ஐம்பாலார் - ஐந்து பகுதியவாகிய கூந்தலையுடையவர் (பெண்கள்)
ஒட்டார் - பகைவர்
ஓத்து - வேதம்
ஓம்பல் - பாதுகாத்தல்
ஓம்பாவிடல் - பாதுகாவாது விடுதல்
கடுஞ்சினவேழம் - மிக்க சினத்தையுடைய யானை
கருமம் - காரியம்
கருமப்பொருள் - காரியத்தின் பயன்
கலிமா - மனம்மிக்க (செருக்குள்ள) மா
கவற்றினால் - சூதாடு கருவியினால்
கழிப்புவாய் மண்டிலம் - கதுவாய்ப்படக் குறைந்த மதி (தேய்பிறை); கழிக்கப்பட்ட நாடு
களிகட்கு - கள்ளுண்டு களிப்பார்கட்கு

காணப்புகல் - காணுமாறு செல்லுதல்
காத்தோம்பல் - காவல்செய்து பாதுகாத்தல்
காப்பாற்றா - காக்கமாட்டாத
காமுறுதல் - விரும்புதல்
கான் - காடு
கான்யாறு காட்டாறு
கானம் - காடு
கிழமை - உரிமை
கீழ்ந்திடுதல் - சிதைத்தல்
குஞ்சரம் - யானை
குழல் - புல்லாங்குழல்
குழவிகள் - குழந்தைகள்
கூர் - மிகுதி
கூற்று - உரை
கைத்து - கைப்பொருள்
கோட்பு - செலவு
கொடும்பாடு - நடுவுநிலைமை யில்லாமை
கொடை - வண்மை
கோட்டி - சபை
கோடு - மரக்கிளை
சக்கரத்தானை - சக்கரப் படையினை யுடையானை (திருமால்)
சத்தியான் - வேற்படையை யுடைய முருகன்
சான்றோர் உள் - சான்றோர் நடுவுள்
சேரு - போர்
செருக்கு - மதிப்பு
செலவு - போதல், செல்லுதல்
செற்றம் - கோபம்
செறல் - கோபித்தல்
செறிவு - அடக்கம்
சேறல் - செல்லுதல்
சோர் - சோர்தல், ஒழுகுதல்
ஞாட்பில் - போரின்கண்
தலைதண்டமாக - தலையிழவாக
தறி - கழு
தறுகண்மை - வீரம்
தன்மை - குணம்
திரு - செல்வம்
துணர் - தொத்து, கொத்து
தூங்கும் - தொங்கும்
தேற்றம் - தெளிவு (தெரிவு)
தொன்மை - பழைமை
நட்ட - இணைத்த
நட்டார் - நண்பர்
நயம் - ஈரம், நன்மை
நலத்தகையார் - நல்ல வடிவினை யுடைய மகளிர்
நறிய - வாசனை பொருந்திய, அழகிய
நனி - மிக
நாகம் - பாம்பு
நாற்றம் - மணம்
நாறாமை - முளையாமை, மணம் இல்லாமை
நீள்கோட்டு - நீண்ட மரக்கிளை
நோன்பு - நோற்றல், விரதம் மேற்கோடல்
நோன்று - பொறுத்து
பகல் - நுகத்துப் பகலாணி
பந்தம் - சுற்றம்
பரிசிலர்க்கு - இரவலர்க்கு
பரிப்பு - செலவு
பரியார்க்கு-காதலில்லாதார்க்கு
பழம் - பழைமை, கனி
பாத்து - இணை, பகுத்து
பாலார் - பகுதியை யுடையவர்
பாவை - பதுமை

பிணி - நோய்
பீடு - பெருமை
புகல் - புகுதல், செல்லுதல்
புணர் - பொருந்திய
புதல்வன் - மகன்
புரவி - குதிரை
புறங்கொடுத்தல் - முதுகுகாட்டுதல், தோல்வியுறுதல்
புறமொழி - புறங் கூறுதல்
பெருமிதம் - செருக்கு
பேதை - அறிவிலி
பேதைமை - அறியாமை
பொற்பனை வெள்ளையை-பொற்பனைக் கொடியையுடைய வெள்ளியோனை (பலதேவனை)
போகீரம் - நீங்கும் ஈரம்
போழ்து - சமயம்
மக்கள் - புதல்வர்
மடிந்திருத்தல் - சோம்பியிருத்தல்
மடுத்துழி - (தானம்) கொண்டவிடத்து
மண்டிலம்-மதி (சந்திரன்); நாடு
மறம் - வீரம், கொடுமை
மற மன்னர் - வீரம் பொருந்திய அரசர்
மற மனத்தார்-மறத்தையுடைய நெஞ்சத்தார்
மறன் - பகை
மறை - சூழ்ச்சி, ரகசியம்
மனவறியாளர் - மனத்தின்கண் உணர்விலார்
மனை - வீடு
மா - பெரிய, மிருகம், குதிரை
மாந்தர் - சனங்கள்
மாடம் - பெரிய வீடு
மாரி - மழை
மாற்றம் - பதிலுரை
மான்று - மயங்கி
மீளிமை - வலிமை
மூது - பழைமை
மூதார் - பழைய பதிகள்
மூரி-வடியாமை, பழக்கப்படாத தன்மை
யாதத - பிணித்த
யாறு - நதி
வண்மை - கொடை
வணர் - வளைந்த
வவ்வுதல் - கொடாது அபகரித்தல்
வழங்கல் - செல்லுதல்
வறியாளர் - வறிய தன்மையையுடையார்
வனப்பு - அழகு
வாயில் - வழி, வாசல்
வாயாமை - கைவாராமை
விழுத்தகு - சீரிய
விழையாதார்க்கு - விரும்பாதார்க்கு
விழைவு - விருப்பம்
விளப்படுதல் - விளைவப்படுதல்
வினை - செயல்
வெம்(மை) - கடுமை
வெம்புரவி - கடுகிச் செல்லும் குதிரை
வெள்ளை - வெள்ளை நிறமுடைய பலதேவன்
வேந்தன் - அரசன்
வேந்து - அரசன்
வேழம் - யானை
வேளாண்மை - (உபகாரம்) வண்மை

# விளக்கக் குறிப்பு

1. சிவன், பலராமன், திருமால், முருகன் இந்நால்வரையும் இங்குக் குறித்த முறையிலேயே

*ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர்சடை*
*மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்*
*கடல்வளர் புரிவளை புரையும் மேனி*
*அடல்வெந் நாஞ்சிற் பனைக்கொடி யோனும்*
*மண்ணுறு திருமணி புரையும் மேனி*
*விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனும்*
*மணிமயில் உயரிய மாறா வென்றி*
*பிணிமுக வூர்தி ஒண்செய் யோனுமென*
*ஞாலங் காக்குங் கால முன்பின்*
*தோலா நல்லிசை நால்வர்* (புறம் 56, 1-10)

எனப் புறநானூறு குறிப்பிடும். இந்நால்வர்க்கும் சிலப்பதிகாரக் காலத்துக் கோயில்கள் உண்மை அந்நூலில் வரும்

*பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்*
*அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்*
*வால்வளை மேனி வாலியோன் கோயிலும்*
*நீலமேனி நெடியோன் கோயிலும்* (சிலப். v, 169-172)

எனவும்

*நுதல்விழி நாட்டத்து இறையோன் கோயிலும்*
*உவணச் சேவல் உயர்த்தோன் நியமமும்*
*மேழி வலனுயர்த்த வெள்ளை நகரமும்*
*கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்*
(சிலப். xiv, 7-10)

எனவும் வரும் அடிகளால் தெரிகிறது.

பொற்பனை என்ற தொடர் 'வயங்கொளிர் பனைக்கொடி (கலி - 104) என்பதனால் விளக்கமெய்துகிறது.

சத்தியான் - சத்தி என்பது வேற்படை. இச்சொல் தமிழில் சங்க காலத்துக்கு மிகப்பிற்பட்டுப் புகுந்த வழக்கு.

2. மனை என்பது இல்வாழ்க்கை என்று பொருள்படும். மனைவி என்று பொருள்படுவதாயின் 'உடன் பிறந்தோர்கள் இல்லாத பெண்ணை மணம் புரிதல் தகுதியன்று' என்னும் ஸ்மிருதிக் கருத்தோடு பொருந்துவதாகலாம். பந்தம் என்பதற்கு 'மகன்' என்றும், மனை என்பதற்கு 'இல்லாள்' என்றும் பொருள் கூறலும் தகும்.

3. பார்ப்பாரில் கோழியும் நாயும்புகல் இன்று - ஒப்பிடுக :

> மனையுறை கோழியொடு ஞமலி துன்னாது
> வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்
> மறைகாப் பாளர் உறைபதி (பெரும்பாண். 299-301)

பாத்துஇல் புடைவை : இரண்டாகப் பகுத்தல் இல்லாத புடைவை, அதாவது ஒற்றைப்புடைவை. ஒன்று உடுத்தல் கூடாது என்பது கருத்து.

4. தடுமாறி - மனம் தடுமாறி. தொடர்பு - நட்பு முதலிய தொடர்பு.

5. கருவி : இச்சொல் சங்க நூல்களில் தொகுதி என்ற பொருளிலும், தொல்காப்பியத்தில் தொகுதி, காரணம் என்ற பொருளிலும், திருக்குறள், சிலப்பதிகாரம் முதலியவற்றில் சாதனம், ஆயுதம் என்ற பொருள்களிலும் வந்துள்ளது. இந்நூலில் வந்துள்ள பொருள் பிற்கூறிய இரண்டு நூல்களின் காலத்தை அடுத்து இது தோன்றியிருக்கவேண்டும் என்பதை உணர்த்துகிறது. படைக்கலம் என்ற இப்பொருள் திவாகரத்தில் காணப்படுகிறது :

> கவசம் பல்லியம் தொடர்புயாழ் படைக்கலம்
> கனக முதற்பூண் தொகுதி மேகம்
> கலனை கசை இவை கருவியாகும்

பெருவலியார்க்கு இன்னா செயல் இன்னா - ஒப்புநோக்குக :

கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு
ஆற்றாதார் இன்னா செயல் (குறள் - 894)

7. இடும்பை யுடையார் கொடை இன்னா - ஒப்புநோக்குக :

பொருள் இல்லார் வண்மை புரிவு (இன்னா - 11)

கொடும்பாடு உடையார் வாய்ச்சொல் இன்னா - ஒப்பிடுக :

மன்றிற் கொடும்பாடு உரைப்பானும் (திரிகடுகம் - 63)

8. நாற்றம் - நன்மணம். இக்காலத்து தூர்நாற்றத்தைத் தான் இப்பதம் குறிக்கும்.

9. பகல் போலும் நெஞ்சத்தார் பண்பு இன்மை இன்னா - ஒப்பு நோக்குக :

நெடு நுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர் (பட்டினப். 206-207)

பால்கொள லின்றிப் பகல்போல் முறைக்கு ஒல்காக்
கோல் செம்மை (கலி - 86, 17-18)

நுகத்துப் பகலாணி போன்று (பழமொழி-95)

10. கள்இல்லா மூதூர் களிகட்கு நற்குஇன்னா - ஒப்பிடுக :

கள்ளின் இடும்பை களி அறியும் (நான்மணிக் - 96)

வள்ளல்கள் இன்மை பரிசிலர்க்கு முன் இன்னா - இதில்முன் என்ற சொல்லை இந்நூலாரும் இனியவை நாற்பதின் ஆசிரியரும் 'மிகவும்' என்ற பொருளில் வழங்கியுள்ளார்கள். இப்பொருள் பண்டை நூல்களில் காணப்படாதது.

வண்மை இலாளர் வனப்புஇன்னா - ஒப்புநோக்குக :

வளமை இலாளர் வனப்பு இன்னா (இன்னா - 28)

11. பொருள் உணர்வார் இல்வழிப் பாட்டுரைத்தல் இன்னா- ஒப்பு நோக்குக : உணர்வார் உணராக்கடை இன்னா (இன்னா-15)

இருள்கூர் சிறுநெறி தாம் தனிப் போக்கு இன்னா-ஒப்புநோக்குக : மான்றிருண்ட போழ்தின் வழங்கல் பெரிதின்னா (இன்னா - 18)

பொருள் இல்லார் வண்மை புரிவு - ஒப்புநோக்குக :

பொருள்இலான் வேளாண்மை காமுறுதல் இன்னா(இன்னா-37)

12. உடம்பாடிலாத மனைவிதோள் இன்னா - ஒப்பு நோக்குக விழைவிலாப் பெண்டிர்தோட் சேர்வு (திரிகடுகம் - 6)

இடங்கழியாளர் தொடர்பு - ஒப்பு நோக்குக :

இடங்கழி நெஞ்சத்து (சிலப். xxiii, 37)

இடங்கழி காமமொடு அடங்கான் (மணிமேகலை x, 22, xviii, 119)

எல்லை கடந்து ஒழுகுபவன் என்பது பொருள். வெண்பாமாலை உரைகாரர் 'இடங்கழி - இராகவேகம்' என்பர். இராகமாவது காமம் முதலியன.

13. தலைதண்டமாகச் சுரம்போதல் இன்னா - தலைதண்டமாக என அரசர் ஆணை பிறந்த காலத்தே சுரம்போதலும் துன்பமாம் என்று பொருள்.

முலைஇல்லாள் பெண்மை விழைவு - ஒப்பு நோக்குக :

கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று (குறள் - 402)

14. மணிஇலாக் குஞ்சரம் வேந்தூர்தல் இன்னா - ஒப்பு நோக்குக :

புல்ஆர்புரவி மணிஇன்றி ஊர்வு இன்னா (இன்னா - 16)

பணியாத மன்னர் பணிவு - இதற்கு 'அகத்தே பணிதலில்லாத பகைமன்னரது புற வணக்கம் இன்னாவாம்' என்று பொருள் கூறுவாரும் உளர்.

15. வணர்ஒலி ஐம்பால் - ஒப்புநோக்குக :

வணர்ந்தொலி ஐம்பால் (கலி - 140, 23) இதற்குக் 'கடை குழன்று தழைக்கின்ற ஐம்பால்' என நச்சினார்க்கினியர் பொருள் கூறினர்.

துணர்தூங்கும் மாவின் படுபழம் இன்னா - விழுந்த பழங் களால் கொம்புகளில் மிகுதியாய்ப் பழங்கள் உண்மையை உணர்ந்து அவற்றைப் பறிக்கவும் எறிந்து கொள்ளவும் முற்படுவாராகலின் இன்னாவாம்.

16. கல்லார் உரைக்குங் கருமப் பொருள் இன்னா - ஒப்பு நோக்குக : கள் உண்பான் கூறுங் கருமப்பொருள் இன்னா (இன்னா - 36)

17. உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பு இன்னா - ஒப்புநோக்குக :

எனதுஎனது என்றிருக்கும் ஏழை பொருளை
எனதுஎனது என்றிருப்பன் யானும் - தனதுஆயின்
தானும் அதனை வழங்கான் பயன்துவ்வான்
யானும் அதனை அது (நாலடி - 276)

18. ஆன்றவிந்த சான்றோர் - ஒப்புநோக்குக :

ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர் யான் வாழு மூரே (புறம் - 191)

ஆன்றவிந்த சான்றோருள் பேதைபுகல் இன்னா - ஒப்பு நோக்குக :

கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல் (குறள் - 840)

19. மறன் உடையான் ஆடையால் மார்பு ஆர்த்தல் இன்னா - இதன் பொருள் கருகலாயுள்ளது. ஆடையால் மார்பினைக் கட்டி மறையாது போர் புரிதல் வேண்டும் என்பது கருத்துப் போலும். இவ்வாறு செய்தல் விழுப்புண் பெறுதற் பொருட் டாகும்.

20. நிலத்து இட்ட நல்வித்து நாறாமை இன்னா - ஒப்பிடுக

பாத்திப் புதைத்தாலும் நாறுத வித்துள (சிறுபஞ்ச - 23)

நலத்தகையார் நாணுமை இன்னு - ஒப்புநோக்குக :

பெண்மை நலத்துக்கு அணிஎன்ப நாணம் (நான்மணி - 11)

21. மாரிநாட் கூவுங் குயிலின் குரல் இன்னு - காதலர் வரவு நோக்கித் தனித்திருக்கும் மகளிர்க்குக் குயிலின் குரல் துன்பஞ்செய்யும் என்பது கருத்துப் போலும்.

மாரிவளம் பொய்ப்பின் - ஒப்புநோக்குக :

மாரி பொய்ப்பினும் (புறம் - 35)

மூரி எருத்து - வடியா எருத்து என்பது பழைய வுரை. பழக்கி வசப்படுத்தப்படாத எருது என்று பொருள்.

23. ஒப்பிடுக :

யானை யுடையபடை காண்டல் மிகஇனிதே ;
ஊனைத் தின்று ஊனைப் பெருக்காமை முன்இனிதே ;
கான்யாற்று அடைகரை ஊர்இனிது ; ஆங்குஇனிதே
மான முடையார் மதிப்பு (இனியவை - 5)

படைதனக்கு யானை வனப்பாகும் (சிறுபஞ்ச - 7)

தேன்நெய் : தேனை உணர்த்தும் மரபுத்தொடர் - ஒப்பிடுக :

தேன்நெய் பெய் வாடாத காம்பு (சிந்தாமணி - 176)

24. சிறைஇல்லா மூதூர் வாயில்காப்பு இன்னு - ஒப்பு நோக்குக :

ஏமம்இல் மூதூர் இருத்தல் மிகஇன்னு (இன்னு 25)

கட்டில்லா மூதூர் உறைவுஇன்னு (இன்னு - 26)

அறைபறை அன்னவர்சொல் இன்னு - ஒப்பிடுக :

அறைபறை அன்னர் கயவர் தாம்கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான் (குறள் - 1076)

நிறையில்லான் கொண்டதவம் - ஒப்பிடுக :
நிறைஇல்லான் கொண்ட தவமும் (திரிகடுகம் - 81)

25. தீமை யுடையார் அயல்இருத்தல் இன்னா - ஒப்பிடுக :

தன்மை யிலாளர் அயலிருப்பும் இம்மூன்றும்
நன்மை பயத்தல் இல (திரிகடுகம் - 11)

காமம் முதிரின் உயிர்க்கு இன்னா - ஒப்பிடுக :

காமமும் நாணும் உயிர்காவாத் தூங்குமென்
நோனா உடம்பி னகத்து (குறள் - 1163)

சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே (குறுந் - 18)

27. பெரியாரோடு யாத்த தொடர்விடுதல் இன்னா - ஒப்பிடுக:

பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல் (குறள் - 450)

எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார் (குறள் - 896)

28. கிழமையுடையாரைக் கீழ்ந்திடுதல் இன்னா - ஒப்பு நோக்குக :

பழைமை எனப்படுவது யாதெனின் யாதுங்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு (குறள் - 801)

வளமை இலாளர் : வண்மை இல்லாதார் (பழைய வுரை). செல்வம் இல்லாதார் என்று பொருள் கொள்ளுதலும் அமையும்.

29. இல்லார்வாய்ச் சொல்லின் நயம் இன்னா - ஒப்பிடுக :

நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும் (குறள் - 1046)

கோட்டி கொளல் - ஒப்பிடுக :

அரம்பிய நூலின்றிக் கோட்டி கொளல் (குறள் - 401)

தங்கணத்தார் அல்லார்முன் கோட்டிகொளல் (குறள்-720)

30. குறிஅறியான் மாநாகம் ஆட்டுவித்தல் இன்னு-ஒப்பிடுக:

மறந்தெரிய ஆடும்பாம்பு ஆட்டும் அறிவிலியும் (திரிகடுகம்-20)

31. நெடுமர நீள்கோட்டு உயர்பாய்தல் இன்னு-ஒப்பிடுக:

நுனிக்கொம்பர் ஏறினர் அஃதிறந்து ஊக்கின்
உயிர்க்கிறுதி ஆகி விடும் (குறள் - 476)

கடுஞ்சின வேழத்து எதிர்சேறல் இன்னு - ஒப்பிடுக:

கொல்யானைக்கு ஓடும் குணமிலியும் (திரிகடுகம் - 20)

32. உரையில் 'வீக்கம்' என்பது நரம்பினது கட்டு.

33. தன்னைத்தான் போற்ருது ஒழுகுதல் நற்கு இன்னு-ஒப்பிடுக:

ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு (குறள் - 974)

முன்னை உரையார் புறமொழிக் கூற்று இன்னு-ஒப்பிடுக:

கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல் (குறள் - 184)

36. குழல்இல் இயமரத்து ஓசை நற்கு இன்னு:

கூடிய குயிலுவக் கருவிகள் எல்லாம்
குழல்வழி நின்றது யாமே (சிலப். iii. 138 - 139)

என்றதனல் குழல் இன்றியமையாத கருவி என்பது பெறப்படும். அஃது இல்லாத இடத்து இயமரங்களின் ஓசை சிறவாது என்பது கருத்து.

குழவிகள் உற்ற பிணிஇன்னு - ஒப்பிடுக:

குழவி பிணிஇன்றி வாழ்தல் இனிதே (இனியவை - 13)

37. கெடுமிடம் கைவிடுவார் நட்பு-ஒப்பிடுக:

கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும் (குறள் - 799)

38. நறியமலர் பெரிதும் நாருமை இன்னா - ஒப்பிடுக :

நாற்றம் இலாத மலரின் அழகு இன்னா (இன்னா-8)

துறைஅறியான் நீரிழிந்து போகுதல் இன்னா - ஒப்பிடுக :
வழங்காத் துறையிழிந்து நீர்ப்போக்கு (திரிகடுகம் - 6)

பிறன்மனை பின்னோக்கும் பேதைமை இன்னா-ஒப்புநோக்குக :

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு (குறள் - 148)

39. வெறும்புற வெம்புரவி ஏற்று இன்னா - ஒப்பு நோக்குக :

பண்இல் புரவி பரிப்பு இன்னா
திறன்இலான் செய்யும் வினைஇன்னா-ஒப்பிடுக :

ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும் (குறள் - 468)

40. கொடுக்கும் பொருள்இல்லான் வள்ளன்மை இன்னா-ஒப்புநோக்குக :

பொருள் இலான் வேளாண்மை காமுறுதல் இன்னா
(இன்னா - 37)

இன்னா, பொருள் இல்லார் வண்மை புரிவு (இன்னா - 11)

பாக்கு : இச்சொல் சங்க நூல்களில் காணப்படவில்லை. அவற்றிற்குப் பின் தோன்றியவைகளில் பாகு என்ற சொல் வடிவம் வந்துள்ளது.

அடகு புலால்பாகு பாளிதமும் உண்ணான்
கடல் போலுங் கல்வி யவன்

என்ற பழம்பாட்டை நோக்குக. கம்பரும்

குற்றபாகு கொழிப்பவர்' (நாட்டு - 29) என்றனர்.

கொடுத்து விடாமை கவிக்கு இன்று; இன்று
மடுத்துழிப் பாடா விடல்

என்ற பகுதியை

பரவிய பாவலர் பாக்கொண்டு இறைஞ்சிப் பரிசிற்றொழில்
வரிசையின் நல்கா தொழியின் ஆனந்தமாம் மற்றவர்கள்
உரைசெய்த எல்லாம் வசையுணர்ந் தோர்கள் விரும்பலன்றித்
தரையினில் நிற்கும் பெரும்பழி யாமென்று சாற்றுவரே
(நவநீதப் - 99)

என்ற செய்யுட் கருத்தோடு ஒப்பிட்டு நோக்குக.

41. அடக்க முடையவன் மீளிமை இன்று - ஒப்பு நோக்குக :

ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து (குறள் - 486)

அடைக்கலம் வவ்வுதல் இன்று - ஒப்பிடுக :

வைதத அடைக்கலங் கொள்வானும் இம்மூவர்
எச்சம் இழந்து வாழ்வார் (திரிகடுகம் - 63)